# உண்மை உண்மையாக

(ஷீஆக்கள் யார்? அவர்கள் சொல்வதென்ன?)

**தமிழில் :**

**ஜாபர் தாலிப்**

www.bookshia.com
knowledge enlivens the soul

# வெளியீடு

Era of Appearance Foundation
مؤسسة عصر الظهور

E-mail:info@thohor.com
eaf-q8@yahoo.com
www.eaf-q8.com
www.thohor.com
P.O.Box:11111 Al-Dasma-Kuwait

الطبعة الأولى

هـ - م

موبايل: 6703601 - 9796703 - 7662770 - (965+)

www.bookshia.com
knowledge enlivens the soul

# முகவுரை

இஸ்லாம் இன்று உலகின் சக்தியாக விளங்கும் அதேவேளை, உலகில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை இஸ்லாமிய அறிஞர்களால் முன்வைக்கப்படும் காலமாக அதன் வளர்ச்சிப்போக்கு காணப்படுகின்றது. இஸ்லாத்தைப் பின்பற்றுவோர் மத்தியில் பல கொள்கை கோட்பாட்டு வித்தியாசங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றைப் பற்றி ஓரளவு தெளிவு காண்பது ஒவ்வொருவருக்கும் மிகப் பிரதானமாகும்.

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் அறிவாலயமாம் கும் நகரில் நீண்டகாலமாக சர்வகலாசாலைகளில் அறபு, பாரசீக மொழிகளில் விரிவுரையாளராகக் கடமையாற்றுபவரும், பன்னூலாசிரியரும், அமெரிக்கா, மலேசியா, இந்தோனேஷியா, தாய்லாந்து, இலங்கை போன்ற பல நாடுகளில் இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபட்டு உலக முஸ்லிம்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றவருமான சங்கைக்குரிய அல்-உஸ்தாத் ஜ.ஃபர் அல்-ஹாதி அவர்களின் ‘அல்-ஹகீகது கமாஹிய’ எனும் அரபு மொழியிலான நூலின் மொழிபெயர்ப்பான இந்நூல் இஸ்லாத்தின் மாபெரும் பிரிவுகளில் ஒன்றாகக் காணப்படும் ஷீஆ சிந்தனையினை மிக இலகுவாகவும், யாவரும் விளங்கும் வகையிலும் ஷீஆக்களின் கொள்கை-கோட்பாட்டினை உண்மைக்கு உண்மையாக எடுத்துரைக்கின்றது.

இஸ்லாமிய விரோத சக்திகளினால் தூண்டப்பட்டு, அவ்வாறானவர்களால் எழுதப்பட்ட ஓரிரு நூல்களைப் படித்துவிட்டு மாநாடு, வெளியீடுகள், பேச்சுக்கள் என ஷீஆ ஜமாஅத்திற் கெதிராக சிலர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்குப் பதிலாக மாத்திரமன்றி, ஒரு சமூகத்தின் உண்மை நிலையை அவர்களது களத்திலிருந்து இந்நூல் அறிமுகம் அறிமுகம் செய்வதன் மூலம் ஷீஆ-ஸுன்னி சமூகங்களுக்கிடையே உண்மையான புரிந்துணர் வினையும் தவ்ஹீத், நுபுவ்வத், மஆத் போன்ற அடிப்படைக் கொள்கைகள் பற்றியும் அது பற்றிய தெளிவினையும் இந்நூல் ஏற்படுத்தும் என எதிர்பார்க்கின்றோம்.

- வெளியீட்டாளர்கள்

# உண்மை உண்மையாக

அனைத்துப் புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே. இறுதித்தூதர் முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி) அவர்கள் மீதும் அவர்களின் தூய குடும்பம், அவர்களின் உத்தம தோழர்கள் மீதும் இறை அருளும், ஈடேற்றமும் உண்டாவதாக.

1. சமகால முஸ்லிகளின் பாரிய எண்ணிக்கையில் இமாமிய்யா கோட்பாட்டையுடைய இமாம் ஜஃபர் ஸாதிக் அவர்களைப் பின்பற்றுவோர் முஸ்லிம் உம்மத்தின் சராசரியாக நான்கில் ஒரு பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் காணப்படுகின்றனர். இஸ்லாமிய வரலாற்றுக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் அல்குர்ஆன் கூறும்,

"நிச்சயமாக விசுவாசங்கொண்டு நற்செயல்களையும் செய்கின்றார்களோ அத்தகையோர் தாம் படைப்புகளில் மிகச் சிறந்தவர்கள்". அல்-பைய்யினா:07

என்ற வசனம் இறங்கியது முதல் இவர்கள் இப்பெயர் கொண்டு அழைக்கப்படலாயினர். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஸஹா பாக்கள் முன்னிலையில் அமீருல் முஃமினின் அலீ இப்னு அபீதாலிப் (அலை) அவர்களது தோள் புயத்தில் கையை வைத்து,

"அலீயே, நீரும் உமது கூட்டத்தார் (உமது ஷீஆ)களும் படைப்புகளில் மிகச் சிறந்தவர்கள்" எனக் கூறினார்கள். (தப்ஸீர் அத்-தபரீ ஜாமிஉல் பயான்) அல்லாமா அஸ்ஸுயூதி அஸ்-ஸாபியீயின் அத்-தூரில் மன்தூர், அல்-ஆலூஸி அல்-பஃதாதி, அஸ்-ஸாபியீன் ரூஹுல் மஆனி போன்ற திருக்குர்ஆன் விரிவுரையாளர்களின் மேற்படி வசனத்தின் விளக்கத்தைப் பாருங்கள். இமாம் ஜஃபர் ஸாதிக் அவர்களின் சன்மார்க்க (பிக்ஹ்) சட்டங்களைப் பின்பற்றுவதால் ஜஃபரீக்கள் எனச் சாட்டப்பட்டு ஷீஆக்கள் என இச்சந்தர்ப்ப சூழ்நிலையிலிருந்துதான் அழைக்கப்பட்டார்கள்.

இப்பிரிவினர் ஈரான் இஸ்லாமிய குடியரசு, ஈராக், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளிலும் துருக்கி, சிரியா, லெபனான், பஹ்ரைன், ரஷ்யா மற்றும் ரஷ்யாவிலிருந்து பிரிந்து சென்ற நாடுகளிலும் கணிசமான அளவு வாழ்கின்றனர். இவ்வாறே லண்டன், ஜேர்மன், பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்க, ஆபிரிக்க, ஆசிய நாடுகளிலும் பரந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கென மஸ்ஜிதுகள், அறிவாலயங்கள், சமூக கலாசார நிலையங்கள் என இவர்களைப் பிரதிநிதித்து வப்படுத்தி பல ஸ்தாபனங்கள் செயல்படுகின்றன.

இவர்கள் பன்முக சமூகங்கள், பல மொழிகளைப் பேசுபவர்கள், பல நிறங்களையுடைய தம் சகோதர மத்ஹபுகள், ஏனைய அமைப்புகளுடைய பல முஸ்லிம்களுடன் அன்பாகவும், பரஸ்பர புரிந்துணர்வுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

"நிச்சயமாக விசுவாசிகள் (ஒருவர் மற்றவருக்கு) சகோத ரர்களே!" 49:10

"இன்னும் நன்மைக்கும் (அல்லாஹ்வுடைய) பயபக்திக்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள்" 05:02

எனும் இறைவசனத்திற்கேற்பவும்,

“முஸ்லிம்கள் தமக்கிடையே ஒரு கை போன்றவர்கள்” (முஸ்னத் அஹ்மத்) 01:27

எனும் ஹதீஸைப் பற்றிப் பிடித்தவர்களாக பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவியும், ஒத்தாசையும் புரிந்து வருகின்றனர்.

2. இஸ்லாத்தையும், முஸ்லிம் உம்மத்தையும் பேணிப் பாதுகாப்பதில் இச்சமூகத்திற்கு சிறந்ததும், மகத்துவமுமிக்க இடமுண்டு. இதே போன்று இஸ்லாமிய வளர்ச்சிப் படியில் ஆட்சி, அரச அறிஞர்கள், இஸ்லாமிய கலைக்களஞ்சிய நோக்கில் பல்லாயிரக்கணக்கான படைப்புகள், நூல்கள் அல்குர்ஆன் பற்றிய சிறியவும் விரிவானவையுமான விரிவுரைகள், ஹதீஸ், அகீதா, ஒழுக்கவியல், அரசியல், சமூகவியல், இலக்கிய இலக்கணம், மொழிநடை என பல படைப்புகளுக்கு வித்திட்டிருக்கின்றனர். அதுமாத்திரமன்றி வைத்தியம், பௌதீகவியல், இரசாயனம், கணிதவியல், வானியல் எனப் பல துறை அறிவியல் ஸ்தாபகர்களாக விளங்குகின்றனர்.

(மேலதிக விபரங்களுக்கு : 29 பாகங்களைக் கொண்ட ஆகா பொஸோர்கின் தஸானீப், ஆபந்தியின் கஷ்புழ் ழுனூன், குஹாலாவின் மு∴ஜமுல் முஅல்லிபீன், ஷெய்யித்தி முஹ்ஸின் அல்-அமீன், அல்-ஆமிலீயின் அ∴யானுஸ்ஷீஆ போன்ற இன்னும் பல நூல்கள்)

3. இவர்கள் எல்லாம் வல்ல இறைவன் ஒருவன், தேவை அற்றவன், அவன் பெறவுமில்லை, பெறப்படவுமில்லை, அவன் உருவம், திசை, இடம், காலம், மாற்றம், நகர்வு, ஏறுதல், இறங்குதல் போன்றவற்றை விட்டும் தூய்மையானவன் என விசுவாசம் கொண்டவர்கள்.

வணங்கி வழிபட அவனைத் தவிர வேறு யாருமில்லை. ஆட்சி ஷரீஆ சட்ட திட்டம் அவனுக்கு மட்டுமே உரியது. மறைமுகமான, அப்பட்டமான அனைத்து வகையான ஷிர்க்குகளும் தெளிவான அநியாயமும், மன்னிக்க முடியாத பாவமுமாகும் எனும் கொள்கை உடையவர்கள்.

இவை அனைத்தையும் உயர்திரு வான்மறையிலிருந்தும் கண்ணியமிக்க ஹதீஸிலிருந்தும் தூய சிந்தனை வடிவமாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

இறைவன் மனிதனைப் போன்றவன், அவன் படைப்புகளுக்கு இணையானவன் என்ற இஸ்ரேலிய (தௌராத், இன்ஜீல்) மற்றும் நெருப்புவணங்கிகளது ஹதீஸ்களிலிருந்து அகீதாவை அமைப்பதை விட்டும் விலகியிருப்பவர்கள் அல்லது அவனை விட்டும் அவன்மீது அநீதி, அட்டூழியம் மற்றும் வீணான பண்புகளைச் சாட்டுவது போன்றவற்றை விட்டும் விலகியிருப்பவர்கள். பொதுவாக பரிசுத்த நபிமார்கள், தூயவர்கள் மீது சுமத்தப்படும் பெரும்பாவங்கள், அச்சங்கள் என்பவை பற்றிய விசுவாசத்தை தமது அகீதாவில் இணைத்துக் கொள்ளாதவர்கள்.

4. இறைவன் நீதியும், நுண்ணறிவும் மிக்கவன் என்னும் கொள்கையுள்ளவர்கள். ‘அவனது நீதம், ஹிக்மத்தின் அடிப்படையிலேயே படைப்புகளைப் படைத்துள்ளான். தாவரங்கள், உயிரற்ற சடலங்கள், மனிதன், மிருகம், வானம், பூமி என எதனையும் வீணாகப் படைக்கவில்லை. ஏனெனில் வீண் என்பது அவனது நீதி,

நுட்பத்திற்கு முரணானதாகும். அது பரிபூரண இறைமையை நிலைநாட்டுவதைத் தடுத்துவிடும். அனைத்துக் குறைகளும் அவனை விட்டும் அப்பாற்பட்டவையாகும்' எனும் நம்பிக்கை கொண்டவர்கள்.

5. அல்லாஹ் தனது நீதி, மற்றும் நுட்பத்தினால் பூமியில் ஜீவியம் தோன்றிய நாள் முதல் நபிமார்களையும், இறைதூதர்களையும் மனிதர்களை நல்வழிப்படுத்த அனுப்பினான். இவர்கள் பரிசுத்தமிக்கவர்கள். இறைவன் அருளிய வேதஞான (வஹி) மொழி மூலம் மனித மேம்பாட்டிற்காக இவர்கள் பரந்த அறிவை பேரருளாகப் பெற்றுத் திகழ்ந்தார்கள். இதனால் மனிதர்கள் பூரணத்துவத்தை நோக்கிப் பயணிக்க முடியும். சொர்க்கத்திற்கு இட்டுச்செல்லும் இறைவழிபாட்டிற்கு இது வழிவகுக்கும். இறையருளையும், அவனது திருப்தியையும் பெற வாய்ப்பேற்படும். இறைதூதர்களில் பிரதானமானவர்களான ஆதம், நூஹ், இப்றாஹிம், ஈஸா, மூஸா போன்றவர்களின் நிலமைகள், பெயர்கள் பற்றி இறைமறையும், நபிமொழியும் பறைசாட்டி நிற்கின்றன.

6. எவன் இறைவனுக்கு வழிப்பட்டு அவனது கட்டளைகளை நிறைவேற்றி வாழ்வின் எல்லா நிலைகளிலும் அவனது சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றாரோ அவர் நீக்ரோ இனத்தைச் சேர்ந்த ஒரு கறுப்பு நிற அடிமையாக இருந்தாலும் கூட அவர் வெற்றியும், விடுதலையும் பெற்றவராக போற்றிப் புகழப்படுபவராகவும், அதே வேளை எவர் இறைவனுக்கு மாறாக நடந்து பாவகாரியங்களில் ஈடுபட்டு அவனது கட்டளைகளை அலட்சியம் செய்து இறைகட்டளைகளை விட்டு ஏனைய கட்டளைகளைப் பின்பற்றி வாழ்கின்றாரோ இறைதூதரின் புனித ஹதீஸின் அடிப்படையில் அவர் ஓர் குறைஷி வம்சத்தைச் சேர்ந்த செய்யிதாக இருந்தாலுங் கூட தண்டனைக்கும், அவமரியாதைக்கும் உட்பட்டவராக கருதப்படுவார் என நம்பிக்கை கொண்டவர்கள்.

நற்கூலியும், தண்டனையும் வழங்கப்படும் இடம் கணக்கும், தராசும், சொர்க்கமும், நரகமும் உள்ள மறுமை நாளாகும். இதனை நிராகரிப்போரின் கூற்று பிழையானது. இதுபற்றி இறைமறை மற்றும் புனித ஹதீஸின் அடிப்படையில் ஷீஆக்கள் மறுமை நாளையும், அதிலுள்ள அனைத்து விடயங்களையும் உறுதிப்பட நம்புகின்றனர்.

7. நபிமார்களில் இறுதி நபியாகவும், றசூல்மார்களில் கடைசியானவரும் சிறப்பும், உயர்வுமிக்கவருமான ஹஸ்ரத் றசூலுல்லாஹ் முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் இப்னு அப்துல் முத்தலிப் (ஸல்) அவர்களாகும் என நம்புகின்றனர். அல்லாஹ் இவர்களை தவறுகள், நெறிபிறழ்வுகளிலிருந்து பாதுகாத்துள்ளான். சிறிய, பெரிய பாவங்கள் அது நபித்துவத்(நுபுவ்வத்)திற்கு முந்தியோ, பிந்தியோ பிரச்சாரப் பணியோடு சம்பந்தப்பட்டதோ, வேறு விடயமோ அனைத்திலும் அவர்கள் பரிசுத்தமிக்கவர்கள். மனித சமூகத்தின் கட்டமாக இறைமறை அவர்களுக்கு இறக்கப்பட்டு அதனை முஹம்மத் (ஸல்) அவர்கள் எத்திவைத்தார்கள். இறை அமானிதத்தை நிறைவேற்றுவதில் உண்மையாகவும், மனத்தூய்மையுடனும் செயற்பட்டார்கள். இதற்காக மிக அர்ப்பணிப்புடன் அண்ணலார் (ஸல்) அவர்கள் செயற்பட்டார்கள் என ஷீஆக்கள் நம்புகின்றனர்.

பொதுவாக பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றி எழுதிய குறிப்புகளும், அவர்களது தனிப்பட்ட வாழ்வு, நிலைமைகள், அற்புதங்கள்... என எழுதிய ஏராளமான நூல்கள் ஷீஆக்களிடம்

காணப்படுகின்றன. இதுபற்றி (ஷேய் முபீதின் கிதாபுல் இர்ஸாத், அத்-தபர்ஸியின் இ.்.லாமுல் வரா பிஅ.்.லாமுல் ஹுதா, மஜ்லிஸின் பிஹாருல் அன்வார், ... கடைசியாக எழுதப்பட்டுள்ள அஸ்-ஸெய்யித் முஹ்ஸினின் அல்-காதமியின் அர்-றசூழ் முஸ்தபா போன்ற) இன்னோரன்ன நூல்களைப் பார்க்கமுடியும்.

அல்-குர்ஆன் பற்றி இவர்கள் இறைதூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு உண்மையாக ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலம் இறக்கி வைக்கப்பட்டது என நம்புகின்றனர். இதனை பிரபல்யமிக்க ஸஹாபாக்கள் - அதில் ஹஸ்ரத் அலீ இப்னு அபீதாலிப் (அலை) அவர்கள் முதன்மையானவர்கள் - கண்மணி (ஸல்) அவர்களில் காலத்திலேயே அவர்களது கண்காணிப்பிலும், மேற்பார்வையிலும், அவர்களது கட்டளை, வழிகாட்டலின் பேரில் அதனைத் திறம்பட மனனம் செய்தனர். அதன் அட்சரங்கள், சொற்கள், வசனங்கள், அத்தியாயங்கள் என்பவற்றைக் கணக்கிட்டுப் பாதுகாத்துள்ளனர். அவற்றை பரம்பரை பரம்பரையாக பாதுகாத்து வருகின்றனர். இதில் எவ்வித கூட்டல், குறைத்தலோ, வேறுபாடோ, மாற்றமோ இன்றி அனைத்து முஸ்லிம்களும் பாராயணம் செய்து ஓதிவருகின்றனர். (இது பற்றி ஸஞ்சானியின் தாரிகுல் குர்ஆன், முஹம்மது ஹாதி ம.்.ரிபதின் அத்தம்ஹீது பீ உலூமில் குர்ஆன் போன்ற இன்னோரன்ன நூல்களைப் பார்க்கலாம்.) இவ்வாறுதான் திருமறை அல்குர்ஆன் பற்றி ஷீஆக்கள் நம்புகின்றனர்.

இவ்வாறே ஷீஆக்கள் இறைதூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் தமது அந்திம காலத்தின் போது தமது பிரதிநிதியாகவும், தமக்குப் பின் முஸ்லீம் சமூகத்தின் இமாமாகவும் ஹஸ்ரத் அலீ (அலை) அவர்களை அல்லாஹ்வின் ஆணைக்கேற்ப முஸ்லிம் சமூகத்தை அரசியல்ரீதியாக வழிநடாத்தல், சிந்தனைக்கான வழிகாட்டல், சிக்கல்களைத் தீர்த்துவைத்தல், அவர்களது ஒழுக்கம், நற்பண்பு, உளப்பயிற்சிக்கான பங்களிப்பு போன்ற அனைத்து அம்சங்களுக்குமாக கதீர்கும் எனுமிடத்தில் வைத்து தமது வாழ்வின் கடைசிக்கட்டத்தில் வைத்து தம்மோடு இறுதி ஹஜ்ஜை மேற்கொண்ட ஸஹாபாக்கள் (சுமார் ஒரு இலட்சத்து இருபதாயிரம் பேர்) முன்னிலையில் தம் பிரதிநிதியாகப் பிரகடனம் செய்தார்கள். இது பற்றி பல இறைவசனங்கள் இறக்கப் பட்டிருக்கின்றன.

இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு சம்சுதீன் முஹம்மது இப்னு தூலூன் அவர்களின் அல்-அயிம்மது அல்-இஸ்னா அஸர் என்ற நூலைப் பாருங்கள்.

இவ்வாறே இறைதூதர் (ஸல்) அவர்கள் அன்று பிரசன்னமாயிருந்த முஹாஜிரீன்கள், அன்சாரிகள் மற்றும் முன்னணி வகித்த ஸஹாபாக்களிடம் அலீ (அலை) அவர்களுக்கு கைமீது கைவைத்து வாக்குறுதி வழங்குமாறு வேண்டிக் கொண்டார்கள். (இதுபற்றி அல்குர்ஆன் விரிவுரைகள், வரலாற்று ஆய்வு ரீதியாக எழுதப்பட்டுள்ள அல்லாமா அமீனியின் அல்-கதீர் எனும் நூலைப் பார்க்கலாம்.)

இவ்வாறே பெருமானார் அவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் மேற்கொண்ட தலைமைத்துவம், நேர்வழி, பயிற்சிகள், கற்பித்தல், சட்டத்தெளிவுகள், சிந்தனை ரீதியான பிரச்சினைகள், சமூகரீதியான முக்கிய விடயங்கள் என்பன போன்ற விடயங்களைத் தெளிவுபடுத்தியது போன்று பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு (அவர்களுக்குப் பின் இமாம், பிரதிநிதி) மக்களின் விசுவாசியாக இருந்து அலை மோதும் நிர்க்கதி நிலையிலிருந்து அமைதிக் கரைக்கு இட்டுச்செல்லும்

ஒருவர் அவசியமாகும். (பரிசுத்தம், பரந்த அறிவுஞானமிக்க) பெருமானார் (ஸல்) அவர்களின் சிறப்புகளைப் பெற்ற இறை வேதவாக்கு (வஹீ) தூதுத்துவம் (நுபுவ்வத்) தவிர்ந்த விடயங்களுக்குப் பொறுப்புக் கூறுபவராகவும், தகைமை பெற்றவராகவும் இருப்பது அவசியமாகும் என்பது ஸியாக்களின் அகீதாவாகும். ஏனெனில் இறைதூதர் (ஸல்) அவர்கள் இறுதிநபியாவர். அவர்களோடு நுபுவ்வத் பூரணப்படுத்தப்பட்டு விட்டது. அவர்கள் இறுதி றஸுலாவர். அவர்களது சன்மார்க்கம் இறுதியான மார்க்கம், அவர்களது ஷரீஆ சட்டங்கள் அறுதியும், முடிவும் பெற்றவை. இவர்கள் கொண்டு வந்த இறைவேதம் இறுதி வேதமாகும். அவர்களுக்குப் பின் வேறு ஒரு நபியோ, மார்க்கமோ, ஷரீஆவோ வரப்போவதில்லை என உறுதியாக விசுவாசிப்பவர்கள்.

(இது விடயமாக ஷீஆக்களிடம் அளவிலும், கணிப்பீட்டின் அடிப்படையிலும் அனேக நூற்கள் காணப்படுகின்றன.)

மனித சமுதாயத்தை நேர்வழிப்படுத்தும் தலைவரின் அவசியம்

பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பின் பொறுப்பு மிக்க, பரிசுத்த இமாம், பிரதிநிதியும் இமாம் அலீ (அலை) அவர்களது நியமனத்துடன் மாத்திரமன்றி நீண்ட காலம் நிலைக்கும் வகையில் இஸ்லாத்தின் ஆணிவேர் வேரூன்றி, ஷரீஆவின் அடிப்படை பாதுகாக்கப்பட, இறையியல் நம்பிக்கைகள் பற்றிய கொள்கைகள் பலவாறாகப் பேசப்படும் சூழ்நிலையில், அவ்வாறான நிலையில் அதனைப் பாதுகாக்கவும், அனைத்து இறையியல் ஒழுங்கமைப்பு போன்ற பிற்காலத்தில் இஸ்லாமிய சமூகத்திற்குத் தேவையான அனைத்து விடயங்களையும், அறிவுரைகளையும் எல்லா வடிவங்களிலும் வழங்கி வைக்க நிச்சயம் இவவாறான இடைவிடாத தலைமைத்துவத்தின் அவசியத்தையும், அதன் யதார்த்த பூர்வமான நிலையையும் (இமாமத்தை) விசுவாசங் கொள்பவர்கள் ஷீஆ சமுதாயம்.

இந்த உயரிய இலட்சியப் பணிக்காக பெருமானார் (ஸல்) அவர்கள் இறைகட்டளைப் பிரகாரம் இமாம் அலீ (அலை) அவர்கள் உட்பட பன்னிரண்டு (இஸ்னாஅஷர்) இமாம்களை அவர்கள் குறைஷி வம்சத்தைச் சேர்ந்த என்ற சொற்பிரயோகத்துடன் (ஸஹீஹ் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்) மாறுபட்ட சொற்பிரயோகங்களுடன் பன்னிரண்டு தலைவர்கள், பிரதிநிதிகள் இருக்கும்வரை இஸ்லாம் கண்ணியமாக இருக்கும் என நம்புகின்றனர். (குறைஷ் வம்சம் அல்லது பனீஹாஷிம் எனவும் ஸியா ஹுஸ்ஸித்தா அல்லது வேறு ஹதீஸ் கிரந்தங்களில் இவர்களது பெயர்களைக் குறிப்பிட்டு பழாயில், மனாகிப், ஸி∴ர், அதப் போன்ற நூல்களில் விளக்கமாக வந்துள்ளது.)

ஜ∴பரிய்யா மத்ஹபைச் சேர்ந்த ஷீஆக்கள் அலீயும் அவர்களது பிள்ளைகள் பதினொரு பேரும் என நம்புவதற்கு மாற்றமாக ஹஸ்ரத் அலீயும் அவர்களது பிள்ளைகளும் அல்ல, அது வேறு நபர்களின் பெயரை உள்ளடக்கியுள்ளது என விவாதிப்பதற்கு இந்த ஹதீஸில் எவ்வித இடம்பாடுகளும் கிடையாது. (இதுபற்றி அல்-ஹாயிரிய் அல்-பஹ்ரானி அவர்களது குலபாஉன் நபி எனும் நூலைப் பார்க்கலாம்)

அஸ்-ஸீஅதுல் ஜ∴பரிய்யாவைச் சேர்ந்த இமாம்கள் பன்னிரண்டு பேர். அவர்கள் முறையே

1. அல்-இமாம் அலீ இப்னு அபீதாலிப் : பெருமானார் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையின் மகன், அவர்களது மருமகன் பாதிமா (அலை) அவர்களின் கணவர்.

2. இமாம் ஹஸன் (அலை) : அலீ பாத்திமா (அலை) அவர்களது பிள்ளையும் நபி (ஸல்) அவர்களின் பேரருமாவர்.

3. இமாம் ஹுஸைன் (அலை) : அலீ பாத்திமா (அலை) அவர்களது பிள்ளையும் நபி (ஸல்) அவர்களின் பேரருமாவர்.

4. இமாம் ஸெய்னுல் ஆப்தீன் அலீ இப்னுல் ஹுஸைன் (அலை)

5. இமாம் முஹம்மத் இப்னு அலீ பாகிர் (அலை)

6. இமாம் ஜ..பர் இப்னு முஹம்மத் ஸாதிக் (அலை)

7. இமாம் மூஸா இப்னு ஜ..பர் காழிம் (அலை)

8. இமாம் அலீ இப்னு மூஸா ரிழா (அலை)

9. இமாம் முஹம்மத் இப்னு அலீ ஜவாத் (அலை)

10. இமாம் அலீ இப்னு முஹம்மத் ஹாதி அந்நகீ (அலை)

11. இமாம் ஹஸன் இப்னு அலீ அஸ்கரி (அலை)

12. இமாம் முஹம்மத் இப்னு ஹஸன் மஹ்தி (அலை)

என பன்னிருவரையும் விசுவாசங்கொள்கின்றனர்.

இந்த பன்னிரண்டு இமாம்களின் பெயர்களை ஹனபி, ஷாபிஈ மத்ஹப்களைச் சேர்ந்த ஹஸ்கபீ, இப்னு தூலூன், பழ்ல் இப்னு ரூஸ்பஹான், ஜாமி, அல்-அத்தார் நைஸாபூரி, மௌலவி போன்ற அறிஞர்கள் தமது நூல்களில் குறிப்பிடுகின்றனர்.

இவர்களில் ஹிஜ்ரி 6ம் நூற்றாண்டில் வாழ்ந்த உலமாக்களில் ஹனபி மத்ஹபைச் சேர்ந்த ஹஸ்கபி அவர்களின் கஸீதா பிரபல்யமிக்கதாகும்.

இறைகட்டளையின்படி இறைதூதர் (ஸல்) அவர்களால் பாவங்கள், தவறுகளை விட்டும் பரிசுத்தமானவர்களும், தூயவர்களுமான முஸ்லிம் சமுதாயத்தின் தலைவர்களான அஹ்லுல் பைத்களாகும். இவர்கள் தமது பாட்டனாரிடமிருந்து மரபு ரீதியாகப் பெற்ற பரந்த அறிவு ஞான மிக்கவர்கள். இவர்கள் மீது அன்பு வைத்து இவர்களைப் பின்பற்றி வாழுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது.

> “நீர் கூறுவீராக, பந்துக்களில் நட்பைத் தவிர இதற்காக நான் யாதொரு கூலியையும் கேட்கவில்லை.” 42:23
>
> “விசுவாசங் கொண்டவரே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். (சொல்லாலும், செயலாலும்) உண்மையாளர் களுடன் ஆகிவிடுங்கள்”. 09:119

என இறைவன் கூறுகின்றான்.

(இது பற்றி அல்குர்ஆன் விரிவுரை, ஹதீஸ், ஸஹாஹ்ஸித்தா, ஷீஆ, சுன்னாக்களிடமுள்ள தனித்தனியான நூல்களைப் பார்க்க முடியும்.)

இந்த தூய இமாம்களின் வாழ்வில் ஒரு பாவமோ, தவறோ வரலாற்றில் பதியப்படவில்லை. தங்களிடம் காணப்பட்ட பரந்த இறை ஞானத்தினால் முஸ்லிம் சமூகத்திற்கு அறிவுப்பணி செய்துள்ளார்கள். இவர்கள் நிறைவான கலைக்களஞ்சியங்கள், ஆழ்ந்த ஞானம், கொள்கை, ஷரீஆ, நற்பண்புகள், திருக்குர்ஆன் விளக்கம், வரலாறு, தனிப்படைப்புகள் என மிக வியத்தகு ஞானப்பதிவுகளைத் தடம்பதித்துள்ளனர் என ஷீஆ ஜ.்.பரிய்யாக்கள் நம்பிக்கை கொள்கின்றனர். இவ்வாறே தமது சொல் செயலால் ஆண் பெண் என உயர் மனிதர்களையும், இறைநேசர்களையும் பயிற்றுவித்துள்ளனர். இவர்களது நற்குணம், நல்லொழுக்கம் பற்றிய விழுமியங்களை அனைவரும் அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

இவர்கள் அரசியல் தலைமைத்துவத்தை விட்டும் தூரப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அகீதாவைப் பாதுகாத்து, ஷரீஆவை பிழையாகச் சென்றுவிடாது கவனித்து அறிவு ரீதியாகவும், சமூகரீதியாகவும் தமது பொறுப்பைச் செய்துள்ளனர் என இவர்களை ஷீஆக்கள் காண்கின்றனர்.

இறைவனின் பணிப்புரைக்கேற்ப இறைத்தூதரினால் வழங்கப்பட்ட முஸ்லிம் சமுதாயத்தின் அரசியல் தலைமைத்துவத்தினை இவர்களிடம் வழங்கியிருப்பின் முஸ்லிம் உம்மத் நற்பேறு, கண்ணியம், மாட்சிமை, கருத்து வேறுபாடோ, வேற்றுமைகளோ இன்றி ஒற்றுமையுடனும், ஒருமைப்பாட்டுடனும் போட்டி பொறாமை இன்றி, கொலையின்றி சிறந்த சமுதாயமாகக் காணப்படும் என்பதில் ஐயமில்லை.

(இதுபற்றிய விளக்கத்துக்கு மூன்று பாகங்களைக் கொண்ட அஸந்ஹைதர் அவர்களுடைய அல்-இமாம், அஸ்-ஸாதிக், வல்-மதாஹிபுல் அர்ப.்.ஆ எனும் நூலை வாசிக்கவும்.)

அல்-குர்ஆன், அல்-ஹதீஸ் (நக்லிய்யா), அறிவு பூர்வ (அக்லிய்யா) ஆதாரங்களின் அடிப்படையில் அகீதா பற்றிய நூல்களில் ஏராளமாக பதியப்பட்டவைகளுக்கமைவாக அஹ்லுல் பைத்களைப் பின்பற்ற வேண்டும். அவர்கள் காட்டிச் சென்ற வழியிலே பயணிக்க வேண்டும். பெருமானார் (ஸல்) அவர்களினால் பிறப்பிக்கப்பட்டு, சிபார்சு செய்யப்பட்ட, பற்றிப்பிடிக்க வேண்டியது விடயம் இது என அவர்கள் நம்புகின்றனர்.

ஹதீதுஸ் ஸகலைன் எனப் பிரபல்யம் பெற்ற,

> ”நிச்சயமாக நான் உங்களிடம் மிகப் பெறுமதிமிக்க இரு விடயங்களை விட்டுச் செல்கின்றேன். இறைவேதம் எனது இத்ரத் அஹ்லுல் பைத்களும். அவ்விரண்டையும் (பலமாகப்) பற்றிப் பிடித்துக் கொண்டால் ஒருபோதும் வழிதவற மாட்டீர்கள்.”

எனும் நபி (ஸல்) அவர்களின் நயமிகு அருள்மொழி முஸ்லிம் அவர்கள் தனது கிரந்தத்திலும் இது போன்று பல நூற்றாண்டு காலமாக முஹத்திதீன்களும், அறிஞர்களும் இந்த விடயத்தைக் குறிப்பிட்டு வந்துள்ளனர். (இதுபற்றி சுமார் மூன்று தசாப்தங் களுக்கு முன்னதாக கெய்ரோ அஸ்ஹர் பல்கலைக்கழகம்

உண்மைப்படுத்தியுள்ளதை வஸ்னவி அவர்களது றிஸாலது ஹதீதுஸ் ஸகலைனைப் பார்த்து அறிய முடியும்.)

இவ்வாறான பிரதிநிதித்துவம், பணிப்புரை முன்னைய நபிமார்களின் வாழ்க்கையில் வேரூன்றிக் காணப்பட்டுள்ளது. (இதுபற்றிய தகவல்களுக்காக மஸ்ஊதி அவர்களது இஸ்பாதுல் வஸிய்யா, மற்றும் இருதரப்பினரின் ஹதீஸ், தப்ஸீர், வரலாற்று நூல்களைப் பார்க்க முடியும்.)

உம்மதே இஸ்லாமி (அல்லாஹ் அவர்களை கண்ணியப்படுத் துவானாக) இது விடயமாக விருப்பு, வெறுப்புகள், குற்றங்குறைகள், திட்டுதல், ஏசுதல், பழித்தல், பழிசுமத்தல் என்பனவற்றிற்கு அப்பால் நின்று படிக்கவும், ஆய்வு செய்யவும், கலந்துரையாடவும் முன்வரவேண்டும். அறிவுரீதியான மாநாடுகளில் உலமாக்கள், புத்திஜீவிகள் மனத்தூய்மையுடனும், தெளிவான மனப்பான்மை யுடனும், சகோதர வாஞ்சையுடன் தம் ஜ.்.பரி ஷீஆ சகோதரர்கள் குர்ஆனிய இறைவேத ஞான ஒளியிலும், பெருமானார் (ஸல்) அவர்களின் சரியான தூதும், பிரபல்யமான ஹதீஸ்கள், சீரிய சிந்தனை, வரலாற்று உண்மைகள், கண்மணி நாயகம் (ஸல்) அவர்களது காலத்திலும், அவர்களது வபாத்திற்குப் பின்னரும் அங்கு நிலவிய பொதுவான அரசியல் சமூக சூழ்நிலைகள் பற்றிப் படிக்கவும், ஆராயவும், அழகிய முறையில் தர்க்கித்துப் பேசவும் முன்வர வேண்டும் என இவர்கள் விரும்புகின்றனர்.

ஸஹாபாப் பெருமக்கள் பெருமானார் (ஸல்) அவர்களை அண்மித்திருந்த ஆண்கள், பெண்கள் என இஸ்லாத்திற்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர். இஸ்லாத்தை நிலைநாட்டுவதில் அவர்கள் தம் உயிர்களையும், உடமைகளையும் தியாகம் செய்த நிகழ்வுகளை முஸ்லிம்கள் கண்ணியப்படுத்தி, மதிப்பளித்து, அவர்கள் மீது இறைதிருப்தி உண்டாகப் பிரார்த்திக்க வேண்டும் என ஜ.்.பரிஷீஆக்களின் அகீதாவாகும்.

எனினும் இவர்கள் மனிதர்கள் உண்மைக்கும், தவறுக்கும் உட்பட்டவர்கள். பெருமானாரின் காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் பற்றி இறைமறை அல்-குர்ஆன் முனாபிகீன், அஹ்ஸாப், ஹுஜ்ராத், தஹ்ரீம், பத்ஹ், முஹ்மத், தௌபா போன்ற அத்தியாயங்களில் வரும் பல வசனங்களில் பல விடயங்கள் பற்றி தெளிவு படுத்துகின்றது. எனவே இவர்கள் அனைவரும் நீதமானவர்கள் எனக் கருதமுடியாது.

அருள்மறை அல்-குர்ஆன், அல்-ஹதீஸ் அடிப்படையில் ஆய்வு செய்வதென்பது சிலரின் நிலைப்பாட்டில் குப்ரைத் தோற்றுவிக்கும் என்பதல்ல. ஏனெனில் ஈமானுக்கும், குப்ருக்கும் (விசுவாசத்திற்கும், நிராகரிப்புக்கும்) இடையேயான வேறுபாடும், அளவீடும் மிகத் தெளிவானதாகும். இதன் அடிப்படை தௌஹீத் (ஏகத்துவம்), தூதுத்துவம் (ரிஸாலத்) மற்றும் மார்க்கத்தின் மிகத் தெளிவான விடயங்களான வாஜிபான தொழுகை, நோன்பு, ஹஜ் போன்றவற்றை நிராகரிப்பது அல்லது மதுப்பாவனை, அம்பெறிந்து குறிபார்ப்பது போன்றவற்றை ஏற்பது என்பன குப்ரின் அடிப்படையாகும்.

ஒழுக்க விழுமியங்களைப் பேணி நடக்கும் முஸ்லிம், இறுதித்தூதர் காதமுன் நபிய்யீன் முஹம்மத் (ஸல்) அவர்களை முன்மாதிரியாகக் கொண்ட இறைவிசுவாசி திட்டுவது, பழிசுமத்துவது, தவறாக எழுதுவது என்பதை விட்டும்

கண்டிப்பாக தமது நாவையும், கரத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் உத்தமர்களான ஸஹாபாக்கள் கண்ணியமும், சிறப்புமிக்கவர்களாவர்.

நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழிகளை ஆய்வுக்குட்படுத்தும்போது ஹதீஸ்களை ஆய்வக நிலைகளுக் குட்படுத்தியே அவை நோக்கப்பட வேண்டியுள்ளது. காரணம், ஸஹீஹான (சரியான) ஹதீஸை இட்டுக்கட்டப்பட்டவற்றிலிருந்து பிரித்தெடுத்துப் பார்க்க வேண்டிய நிலை உள்ளது. இதுபற்றி இறைத்தூதர் (ஸல்) அவர்களே கூறியுள்ளார்கள். இதனால் சில சந்தர்ப்பங்களில் சில விடயங்களில் சாதக, பாதக நிலை ஏற்படும் நிலையும் உள்ளது. ஹதீஸ்கலை ஆய்வுகள் பற்றி இருதரப்பு அறிஞர்களும் பல ஆய்வு நூல்களைத் தந்துள்ளனர். அஸ்-சுயூத்தி, இப்னுல் ஜௌஸி போன்றோரின் உண்மையான மற்றும் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் தொடர்பான ஆய்வுநூல்களில் அவற்றை அவதானிக்க முடிகின்றது.

ஜஃபரிய்யாக்கள் இமாம் மஹ்தீ (அலை) அவர்களின் இருப்பைப் பற்றி நம்பிக்கை கொண்டவர்கள். இதுபற்றி பெருமானார் (ஸல்) அவர்களின் ஹதீஸ்கள் பலவற்றைப் பார்க்க முடிகின்றது.

“நிச்சயமாக அவர்கள் பாத்திமாவின் சந்ததியிலிருந்து உள்ளவர்கள் - (இமாம்) ஹுஸைனின் ஒன்பதாவது பரம்பரையிலுள்ள பிள்ளையாகும்”.

இவ்வகையில் இமாம் ஹுஸைனின் எட்டாவது பரம்பரையாக வந்த இமாம் ஹஸன் அல்-அஸ்கரீ (அலை) அவர்கள் ஹிஜ்ரி 260ம் வருடம் வபாத்தாகி விடுகின்றார்கள். இவர்களுக்கு (முஹம்மத்) என்ற பெயர் கொண்ட, அபில் காஸிம் எனும் சிறப்புப் பெயருடைய பிள்ளை ஒருவர் இருந்தார். இவர்தான் இமாம் அல்-மஹ்தி (அலை) ஆகும். (குறிப்பு: இருதரப்பு (ஷீஆ சுன்னா) கிதாபுகளின் ஸஹீஹான ஹதீஸ்: கடைசிகாலத்தில், எனது பெயரைத் தனது பெயராகவும், எனது சிறப்புப் பெயரைத் தனது சிறப்புப் பெயராகவும் கொண்ட ஒருவர் எனது சந்ததியிலிருந்து வெளியாகி பூமியில் அநியாயம், அட்டூழியம் நிறைந்த நிலையில் நீதி நியாயத்தினால் அதனை நிரப்பச் செய்வார் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.)

நம்பகத்தன்மை மிக்க முஸ்லிம் அறிஞர்கள் இவர்களது பிறப்பு, விசேட சிறப்புக்கள், இவர்களது தலைமைத்துவம் மற்றும் அவரது பாட்டனாரிடமிருந்து கிடைத்த உறுதியுரை என்பன பற்றிக் கூறியுள்ளார்கள். இவர்கள் பிறந்து ஐந்து வருடங்களின் பின் மக்களின் பார்வையிலிருந்து மறைந்து விட்டார்கள். ஏனெனில் இவர்களைக் கொலை செய்து அழித்துவிட முயன்றனர். ஆனால் அல்லாஹுத்தஆலா பூமி அநீதி, அட்டூழியத்தினால் பறைசாட்டும் போது நீதி நியாயத்தை நிலைநாட்டி பூமியைத் தூய்மைப்படுத்தி நீதியான இஸ்லாமிய ஆட்சியை நிலைநாட்ட இவர்களைப் பாதுகாத்து விட்டான்.

இது ஒரு விந்தையான விடயமல்ல. இவர்களது நீண்டகால வாழ்வு பற்றியும் அதிசயிக்க வேண்டியதில்லை. ஏனெனில் ஹஸ்ரத் இமாம் மஹ்தீ (அலை) அவர்கள் பிறந்து 1176 வருடங்கள் சென்றும் உயிருடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் ஈஸா (அலை) (மஸீஹ்) அவர்கள் அதனையும் விடக் கூடிய காலம் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்ற அல்குர்ஆனின் கூற்றை நாம் இங்கு கவனத்திற்கொள்வோமாக. இவ்வாறே நபி நூஹ் (அலை) அவர்கள் தமது கூட்டத்தாரிடம் 950 வருடங்கள் (அல்புசனதின் இல்லா கம்ஸீன

ஆமன்) ஜீவித்தார்கள் என இறைவன் கூறுகின்றான். இதே போல் ஹஸ்ரத் ஹிழ்ர் (அலை) இன்று வரை வாழ்ந்து கொண்டே இருக்கின்றார்கள்.

அல்லாஹ் மிக ஆற்றலுடையவன். அவன் விரும்பியவாறு விடயம் நடக்கும். அதனை யாரும் தடுக்க முடியாது. நிறுத்த முடியாது. நபி ஹஸ்ரத் யூனுஸ் (அலை) பற்றி:-

“ஆனால் அவர் (மீன் வயிற்றினுள்) நம்மைத் துதி செய்பவர்களில் இல்லாமலிருந்திருந்தால் (மறுமையில்) அவர்கள் எழுப்பப்படும் நாள் வரை அதன் வயிற்றிலேயே தங்கியிருந் திருப்பார்கள்” (37:143:144) என்று இறைவன் கூறவில்லையா? சுன்னத்வல் ஜமாஅத்தைச் சேர்ந்த முன்னணி அறிஞர்கள் பலர் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் பிறப்பு பற்றியும், அவர்களது இருப்பு, பெயர், தந்தை, அவர்களது குண இயல்புகள் பற்றி எல்லாம் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

யு. அப்துல் மு.ஃமின் அஸ்ஸிப்லன்ஜி அஸ்-ஸாபியீ அவர்கள் தனது “நூருல் அப்ஸார் பீ மனாகிபி ஆலிபைத்தின் நபியில் முக்தார்” எனும் நூலில்:-

1. இப்னு ஹஜ்ர் அல்-ஹைதமி அல்-மக்கீ அஸ்-ஸாபியீ அவர்கள் அஸ்-ஸவாயிகுல் முஹ்ரிகா எனும் நூலில்:-

அபுல்காஸிம் முஹம்மத் அல்-ஹுஜ்ஜா அவர்களுக்கு அவர்களது தந்தை மரணிக்கும் போது ஐந்து வயதாகும். ஆனால் அல்லாஹ் அவர்களுக்கு (வயதில்) ஹிக்மத்தை வைத்துள்ளான். அவர்கள் அல்-காயிம் அல்-முந்தழர் (எதிர்பார்க்கப்படுபவர்) என அழைக்கப்படுகின்றார்கள்.

2. உஸ்மானிய ஆட்சிக்காலத்தில் துருக்கி நாட்டின் ஆஸ்தானா அச்சகத்தில் பதிப்பாகிய அல்-கந்தூஸி அல்-ஹனபி, அல்-பல்கீ அவர்களின் “யனாபீஉல் மவத்தாஹ்” எனும் நூலிலும்,

3. அஸ்-ஸெய்யித் முஹம்மது ஸதீக் ஹஸன் அல்-கனூஜி அல்-புகாரியின் அல்-இதாஅது லிமாகான வமாயகூனு பைன எதையிஸ்ஸாஆ எனும் நூலிலும் இது தொடர்பாகக் குறிப்பிடப்படுகின்றது.

இவை முற்காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் குறிப்பாகும். பிற்காலத்தில் வாழ்ந்த டாக்டர் முஸ்தபா அர்-ராபி.ஃயி தமது இஸ்லாமினா எனும் நூலில் இமாம் மஹ்தீ (அலை) அவர்களது பிறப்புப் பற்றிய ஐயங்கள், சந்தேகங்கள் அனைத்தையும் ஆய்வுக் குட்படுத்தி அறிவுபூர்வமான ஆய்வொன்றினை வழங்கியுள்ளார்கள்.

ஷீஆ ஜ.ஃபரீயாக்கள் தொழுகின்றார்கள், நோன்பு நோற்கின்றார்கள், தமது பணத்திலிருந்து ஸகாத், கும்ஸ் கொடுக்கின்றார்கள். மக்கா முகர்ரமா சென்று ஹஜ் செய்கின்றார்கள். வாழ்நாளில் அதற்கும் அதற்குரிய உம்ராவை ஒரு தடவை நிறைவேற்றுவது வாஜிப் எனவும், ஏனைய தடவைகள் நிறைவேற்றுவது விரும்பத்தக்கது (முஸ்தஹப்) எனவும் கருதுகின்றனர். நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கின்றனர். இறைநேசர்களையும், நபியின் நேசர்களையும் பின்பற்றி எதிரிகளுடன் விரோதத்துடன் நடந்து கொள்கின்றனர். இஸ்லாத்தையும், முஸ்லீம்களையும் எதிர்த்து நிற்போர்க்கெதிராக எதிர்த்து நிற்கின்றார்கள். சமூக, பொருளாதார விடயங்களிலும் வாணிபம், வாடகை, திருமணம், விவாகரத்து,

வாரிசுச்சொத்து, ஒழுக்கவியல் பயிற்சி, பால்குடி, ஹிஜாப் போன்ற குடும்பவியல் விவகாரங்களில் தூய இஸ்லாத்தின் சட்டதிட்டங்களுக்கேற்ப நடப்பதில் முன்னிற்கின்றார்கள். இதற்காக அரும்பாடுபடுகின்றனர். இவ்வாறான ஷரீஆ சட்டங்களை இறையச்சமிக்க, உலக ஆசாபாசங்களில் மூழ்கிவிடாத உயர்தகு முஜ்தஹித்கள் (சட்டவல்லுனர்கள்) இறைவேதம், ஸஹீஹான ஹதீஸ், உறுதியான அஹ்லுல்பைத்களிடமிருந்து பெறப்படும் ஹதீஸ், அக்ல் (புத்திக்கூர்மை), உலமாக்களின் ஏகோபித்த முடிவு (இஜ்மா∴) என்பனவற்றிலிருந்து பெறுகின்றனர்.

நாளாந்த ஐவேளை தொழுகைக்கும் குறிப்பிட்ட நேரமுள்ளது. ஐவேளை தொழுகைக்கான நேரம் அதிகாலை (பஜ்ர்), மதியம் (ளுஹர்), மாலை (அஸர்), இரவின் ஆரம்பம் (ம∴ரிப்), சராசரி இரவு (இஷா) என ஐந்து வக்துகளுண்டு. குறிப்பிட்ட இந்த நேரங்களில் ஐந்து வக்தையும், ஐவேளை தனித்தனியாகத் தொழுவதே சிறந்தது. என்றாலும் இறைதூதர் (ஸல்) அவர்கள் சங்கடம், நோய், பிரயாணம், மழை ஆகிய காரணங்களின்றி ளுஹரையும் அஸரையும் மற்றும் ம∴ரிபையும் இஷாவையும் சேர்த்துத் தொழுதுள்ளார்கள். இதுபற்றி ஸஹீஹ் முஸ்லிம் போன்ற நூல்களில் காணலாம். இச்சலுகையை உம்மத்திற்கு இலேசுக்காகவும், சலுகைக்காகவும் இவ்வாறு இறைதூதர் (ஸல்) அவர்கள் செய்துள்ளார்கள். இவ்வாறே ஐவேளைத் தொழுகையினை இவர்களும் நிறைவேற்றுகின்றனர். இது சமயத்தில் இயல்பாக நடக்கின்ற ஓர் நிகழ்வாகும்.

ஏனைய முஸ்லிம்கள் பாங்கு சொல்வதைப் போன்று இவர்களும் அதான் சொல்கின்றனர். ஆனால் ”ஹய்ய அலல் பலாஹ்” விற்குப்பின் “ஹய்யா அலா கைரில் அமல்” எனும் வசனத்தைக் கூறுகின்றனர். இவ்வசனம் இறைதூதர் (ஸல்) அவர்களது காலத்தில் அதானில் காணப்பட்டது. ஆனால் இரண்டாம் கலீபா தனது ”இஜ்திஹாத்”தின்படி அதனை பாங்கிலிருந்து நீக்கினார்கள். ஏனெனில் முஸ்லீம்கள் ஜிஹாதை விட்டுவிடுவார்கள் என்பதற்காக அது நீக்கப்பட்டது. (இது பற்றி அல்லாமா அல்-கௌஸஜி அல்-அஷ்அரீயின் ஸரஹுத் தஜ்ரீதுல் இ∴திகாத் எனும் நூலிலும் கிந்தி அவர்களது அல்-முஸன்னிப், அல்- முத்தகி அல்-ஹிந்தியின் கன்ஸுல் உம்மால் போன்ற நூல்களிலும் காணலாம்.) இதே நேரம் இரண்டாம் கலீபா உமர் இப்னுல் கத்தாப் அவர்கள் “அஸ்ஸலாது ஹைரும் மினன் நவ்ம்” எனும் வசனத்தைச் சேர்த்துள்ளார். இது இறைதூதர் (ஸல்) அவர்களது காலத்தில் இருக்கவில்லை. (மேலதிக விபரங்களுக்கு ஹதீஸ் மற்றும் வரலாற்று நூல்களைப் பார்க்க முடியும்.) பொதுவாக இஸ்லாத்தில் இபாதத் (வணக்கங்கள்) மற்றும் அதற்கு முன் செய்யப்பட வேண்டியவை ஷரீயாவுக்குச் சொந்தக்காரரின் கட்டளையை வேண்டி நிற்கின்றது. (ஷரீஆவுக்குச் சொந்தக்காரர் இறைவனும், இறைதூதரும்) அவரது அனுமதி தேவை. அதாவது எந்த விடயமாக இருந்தாலும் அல்-குர்ஆன், அல்-ஹதீஸின் ஆதாரங்களின் அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட வேண்டும். இல்லாவிட்டால் அது பித்அத்தானதாகும். அதனை அதற்குரியவருக்கே திருப்பி விடப்படும். அது நிராகரிக்கப்பட வேண்டியதுமாகும். வணக்கவழிபாடுகள் மாத்திரமின்றி எந்த விடயமானாலும் அதனைக் கூட்டவோ, குறைக்கவோ முடியாது. ஷரீஆ ரீதியான விடயம் எதுவானாலும் தனிப்பட்ட எவரது எண்ணப்பாடும் செல்லுபடி அற்றதாகும்.

ஜ∴பரி மத்ஹபைச் சேர்ந்த ஷீஆக்கள் பாங்கு சொல்லும் போது “அஷ்ஹது அன்ன முஹம்மதர் றசூலுல்லாஹ்” விற்குப் பிறகு “அஷ்ஹது அன்ன அலிய்யவ் வலிய்யுல்லாஹ்” எனக் கூறும் விடயம் என்னவென்றால் ரசூலுல்லாஹ் மற்றும் அஹ்லுல்பைத் (ஸலவாதுல்லாஹி அலைஹிம்)களிடமிருந்து பெறப்பட்ட

ரிவாயத்களின் அடிப்படையில் “முஹம்மதுர் றசூலுல்லாஹ்”விற்குப் பிறகு அலீ (அலை) அவர்கள் பற்றி சொர்க்கத்தின் வாசலில் ரசூலுல்லாஹ்விற்குப் பிறகு ”அலீயுன் வலீயுல்லாஹ்” என்ற வசனம் பொறிக்கப்பட்டிருந்ததாக அறிய முடிகிறது. சிலர் சொல்வது போல் இது அலீயை இறைவனின் அந்தஸ்திற்கு அல்லது இலாஹிய்யத்தின் தரத்துக்கு கொண்டு செல்லும் (அல்லாஹ் பாதுகாப்பானாக!) கூற்று அல்ல. ஷீஆக்கள் அலீ (அலை) அவர்களுக்கு நுபுவ்வத்தைக் கூறுவதில்லை. அலீ நபியல்ல என்பன பறைசாட்டவே இவ்வசனம் சொல்லப்படுகின்றது.

இதனால் ஷஹாததைன் (அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் அஷ்ஹது அன்ன முஹம்மதன் ரசூலுல்லாஹ்) க்குப் பிறகு “ரஜா.ஃ.”வாகக் கூறப்படுகின்றது. மாறாக இது அதானின் ஒரு வசனம் என்றோ இதனைக் கூறுவது வாஜிப் என்றோ ஜ.ஃ.பரி ஷீஆ புகஹாக்கள் கொள்ளுவதில்லை.

எனவே, மேலே சொன்னது போல் இது அதானின் ஒரு பகுதி எனும் நிய்யத்துடன் சொல்லப்படுவதில்லை. இதனால் இது பித்அத்தாகக் கொள்ளப்படுவதில்லை.

8. மண்ணில் அல்லது கல் போன்ற பூமியிலுள்ள பகுதிகள் அல்லது அதிலிருந்து தலைப்பவை (உ-ம்: பண்பாய்)

சுஜுூது செய்யும் போது காபட், விரிப்பு, உண்ண அல்லது அணியக்கூடிய பொருள்களின் மீது செய்யாது மண், கல் போன்ற பூமியின் ஒரு பகுதி அல்லது மண்ணினால் செய்யப்பட்ட மண்களிலிருந்து முளைக்கக்கூடியவற்றிலேயே சிரம்பணிந்து சுஜுூது செய்வார்கள். ஏனெனில் இதுபற்றி ஷீஆ மற்றும் சுன்னா நூல்களில் நபி (ஸல்) அவர்களில் பல ஹதீதுகள் வந்துள்ளது மாத்திரமின்றி மண்மீது சுஜுூது செய்யுமாறு ஏவி ஒரு முறை கடும் சூட்டைத் தடுத்துக்கொள்ள ஒரு முறை ஹஸ்ரத் பிலால்(ரழி) அவர்கள் தமது தலைப்பாகையின் நுனியை நெற்றிக்கும், பூமிக்குமிடையே திரையிட்டு சுஜுூது செய்ய முனைந்த போது பெருமானார் (ஸல்) அவர்கள் அதனைத் தமது கையினால் அகற்றிவிட்டு ‘பிலாலே உமது நெற்றியை மண்மீது படுமாறு செய்து கொள்ளுங்கள்’ எனக் கூறினார்கள்.

இதே போன்று ஹஸ்ரத் சுஹைப் மற்றும் ரிபாஹ் போன்ற நண்பர்களை நோக்கி, சுஹைபே, உமது முகத்தை (நெற்றியை) மண்ணில் படவைப்பீராக. ரிபாஹ், உமது முகம் மண்ணில் பட வைப்பீராக எனக் கூறிய சம்பவங்களை அறிய (புகாரி, கஸ்ஸுூல் உம்மால், அப்துர் ரஸ்ஸாக் - அஸ்-ஸன்.ஃ.ஆனியின் அல்-முஸன்னிப் காஸிபுல் கிதாவின் அஸ்-ஸுஜுூது அலல் அர்ழ் என்னும்) நூல்களைப் பாருங்கள்.

இறைதூதர் (ஸல்) அவர்கள் “எனக்கு பூமி ஸுஜுூது செய்யும் தளமாகவும், தூய்மையாகவும் ஆக்கப்பட்டுள்ளது” எனக் கூறும் ஹதீஸ் ஸஹீஹ் புகாரி மற்றுமுண்டான ஏனைய ஹதீஸ் நூல்களில் காணலாம்.

ஏனெனில் மண்ணில் சுஜுூது செய்வதும், ஸஜதாவின் போது நெற்றி பூமியின் (மண்)மீது வைப்பதே இறைவனுக்கு முன் சுஜுூதின் உன்னத நிலையினைத் தோற்றுவிக்கும். இது வணங்கப்பட வேண்டியவருக்கு முன் சிரம் சாய்த்த இறுதிக் கட்டமாகவும், பக்திபூர்வமானதாகவும் காணப்படுகின்றது.

(பூமியாகிய) “அதிலிருந்தே நாம் உங்களைப் படைத்தோம். அதனுள்ளேயே நாம் உங்களை மீட்டுவோம். இன்னும் அதிலிருந்தே நாம் உங்களை இரண்டாம் முறையாகவும் வெளிப்படுத்துவோம்.” 20:55

எனும் இறைவன் கூறுகின்ற அடிப்படை, மூலப்பொருளை இது உணர்த்துவதாய் இல்லையா?

சுஜூது என்பது பக்தியின் அதிஉச்சநிலை, இந்த உச்சநிலை விரிப்பு, காபட், பெறுமதிமிக்க பொருள்களின் மீது சிரம்சாய்ப்பதால் பெற முடியாது. உடலின் சிறந்த இடமாகிய சிரசை மிகவும் அற்பப்பொருளாகிய மண்மீது வைப்பதன் மூலம் ஏற்படுகின்றது. (இதுபற்றி பத்தாம் நூற்றாண்டின் எகிப்து நாட்டு பிரபல மார்க்க அறிஞர் அஸ்-ஸ.்.ராணி அல்-அன்சார் அல்-மிஸ்ரியின் அல்-யவாகீத்து வல்-ஜவாஹிர் எனும் ஏட்டைப் பாருங்கள்)

மண் தூய்மையானதாக இருக்க வேண்டும். இதனால்தான் ஷீஆக்கள் மண்சுத்தமானது என்பதற்காக தம்மோடு களிமண் போன்ற ஒரு காய்ந்த கல்லை எடுத்துக் கொள்கின்றனர். (மண்ணை கையில் தூக்கி வைத்திருக்க முடியாது) இது சிலவேளை அருளை (பரகத்) எதிர்பார்த்து நாயகத்தோழர்கள் தம்மோடு வைத்திருந்த மக்கத்துச் சிறு மண்துகள்களாக அல்லது பெருமானாரின் பேரர் இமாம் ஹுஸைன் ஷஹீதான கர்பலா மண்ணாக இருக்கலாம்.

(இது பற்றி மேலதிக விளக்கம் ஸன்ஆனியின் அல்-முஸன்னிப் எனும் நூல்களில் காணலாம்.)

ஷீஆக்கள் இதன் மீதுதான் கட்டாயம் சுஜூது செய்ய வேண்டும் எனும் நிலையிலுமில்லை தூய்மையான நிலத்தின் மீது உதாரணமாக மஸ்ஜிதுன்நபி, மற்றும் கண்ணியமிக்க க.்.பாவில் இடப்பட்டுள்ள சலவைக்கல் மீது சுஜூது செய்கின்றனர். இதில் எதுவிதப் பிரச்சினையும் ஏற்படுவதில்லை.

இதே போன்று தொழுகையில் இடது கைமீது வலது கையை வைத்து கை கட்டித் தொழுவதில்லை. ஏனெனில் இறைதூதர் (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. இதுபற்றி ஆதாரம் உறுதிப்படுத்தப்படவில்லை. இதனால் மாலிக் மத்ஹபில் கூட தொழுகையில் கைகட்டுவதில்லை. (இதுபற்றி மேலதிக விபரங்களுக்கு புகாரி, முஸ்லிம், பைஹகீ, மாலிக் மத்ஹபின் சட்டத்தை அறிந்து கொள்ள இப்னு ருஷ்துடைய பிதாயதுல் முஜ்தஹித், அல்-மாலிக் போன்றோரின் நூல்களில் காணலாம்.)

ஷீஆக்கள் வுழு செய்யும் போது முழங்கையிலிருந்து விரல் நோக்கி (மேலிருந்து கீழாக)க் கழுவுகின்றனர். மாறாக கீழிருந்து மேல் நோக்கிக் கழுவுவதில்லை. ஏனெனில் வுழு எவ்வாறு செய்ய வேண்டும் என அஹ்லுல் பைத் (நாயகத்தின் குடும்பத்தவர்) களிடமிருந்து இவ்வாறே பெற்றுக் கொண்டனர். இவர்கள் மற்றவர்களை விட விடயமறிந்தவர்கள். தமது பாட்டனாரிடம் (ஸல்) அவர்களிடமிருந்து மிகத் தெளிவாகக் கற்றுக் கொண்டனர். பெருமானாரும் இவ்வாறே வுழுச் செய்துள்ளார்கள். சூறா மாயிதாவின் ஆறாம் வசனத்தில் இலா வை ம.்.அ என விரிவுரை செய்யப்பட்டிருக்கின்றது. இதுபற்றி ஸாபியீ அவர்களின் நிஹாயதுல் முஹ்தாஜ் எனும் நூலிலும் காணப்படுகின்றது.

மேலே சொன்னதைப் போன்று வுழூவின் போது காணலாம். காலையும், தலையையும் மஸ்ஹு (நீரால் தடவுதல்) செய்வார்கள். அதனை கழுவுவதில்லை. ஏனெனில் இப்னு அப்பாஸ்(ரழி) அவர்கள் வுழூ என்பது இரு (உறுப்புக்களை) கழுவுவதும், இரு உறுப்புக்களைத் தடவுவதுமாகும் எனக்கூறியுள்ளார்கள்.

இதுபற்றி (அஸ்-ஸுனன், மஸானீத் மற்றும் வுழூவுடைய வசனத்திற்கான பக்ருர்ராஸியின் விரிவுரையில் காணலாம்.)

**தற்காலிக திருமணம் (முத்ஆ) பற்றி:-**

> “ஆகவே அவர்களிடமிருந்து எதை நீங்கள் சுகமனுபவித்தீர் களோ, (அதற்காக) அவர்களுக்குக் குறிப்பிட்ட மஹரைக் கட்டாயக் கடமையாக அவர்களுக்கு நீங்கள் கொடுங்கள்.” 4:24

எனும் இறைவசனத்தில் தெளிவான வசனத்திற்கேற்ப தற்காலிக திருமணம் அனுமதிக்கப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளனர். இதனை இறைதூதர் (ஸல்) அவர்களது காலத்தில் முஸ்லிம்கள் செய்துள்ளனர். இரண்டாவது கலீபாவின் ஆட்சிக்கால நடுப்பகுதி வரையில் இத்திருமணம் அனுமதிக்கப்பட்டதாகவே இருந்துள்ளது.

ஷரீஆ ரீதியாக அனுமதிக்கப்பட்ட இத்திருமணமும் நிரந்தர திருமணமும் பின்வரும் விடயங்களில் பொதுவான நிபந்தனை களைக் கொண்டுள்ளது.

1. திருமண பந்தத்தில் கணவனோடு இல்லாதவளாக இருக்க வேண்டும். பெண் பக்கத்திலிருந்து ஈஜாப் (கடமையாக்குதல்) பும் ஆண்பக்கமிருந்து கபூல் (அங்கீகரித்தலும்) இடம்பெற வேண்டும்.

2. நிரந்தரத் திருமண(தாயிம்)த்தின் போது பெண்ணுக்குக் கொடுக்கும் கட்டாயச் செல்வம் மஹர் எனவும், முத்ஆவின் போது கொடுக்கப்படுவது அல்-அஜ்ர் இவ்வாறே இறைமறை நாமமிட்டுள்ளது.

3. கணவன் மனைவியை விட்டுப் பிரியும் போது மனைவி கட்டாயம் இத்தா இருக்க வேண்டும்.

4. பிரிந்தவுடன் இத்தா இருப்பது அவசியம். ஆண்பிள்ளை தந்தையுடன் சேர்க்கப்படுவதும் அவசியமாகும். ஏக காலத்தில் ஒரு கணவனோடுதான் இருக்க முடியும்.

5. தந்தைக்கும் பிள்ளைக்கும், தாய்க்கும் பிள்ளைக்கும் இதே போன்று மறுபக்கமாகவும் வாரிசுச் சட்டத்திற்குட்படுவார்கள்.

6. தற்காலிகத் திருமணம் காலத்தை நிர்ணயிப்பதில் நிரந்தர திருமணத்தை விட்டும் வித்தியாசப்படுகிறது. இவ்வாறே செலவு கொடுப்பது, பாகப்பிரிவு, துணைவர்களுக்கிடையேயான வாரிசுச் சொத்துரிமை என்பனவற்றிலும் வேறுபட்டுக் காணப்படகின்றது. குறிப்பிட்ட காலம் முடிந்ததும் அல்லது ஒப்பந்தம் காலவதியாகுமுன் காலத்தைக் குறைத்துக் கொண்டாலும் திருமண ஒப்பந்தம் காலாவதியாகி விடுகின்றது. இதற்கெனப் பிரிவதற்கு தலாக் அவசியமில்லை.

நிரந்தர திருமணத்திற்கு தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ளவோ அல்லது மரணம் அல்லது வேறு காரணங்களால் மனைவியை அடைந்து

கொள்ள முடியாமல் கண்ணியமாகவும், மரியாதையாகவும் வாழ நினைப்போர்க்கு இவ்வாறான திருமணத்தை ஷரீஆ ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதன் ஹிக்மத் (யதார்த்தத்)தை அறிய முடியும். சமூக ரீதியான சீர்கேடுகளுக்கு தற்காலிக (முத்ஆ) திருமணம் ஒரு வரப்பிரசாதமாகவும், தீமைகளையும், சட்டரீதியற்ற சீரழிவையும் விட்டு சமுதாயத்தைப் பாதுகாக்க ஒரு வழியாகவும் காணப்படுகின்றது.

இவ்வாறே சட்ட ரீதியாக திருமணத்திற்கு முன்னதான புரிந்துணர்வைத் தோற்றுவிப்பதிலும், அங்கீகாரமற்ற சந்திப்பு, விபச்சாரம், பாலியல் நெருக்கீடு, ஒரு திருமணத்துடன் வாழமுடியாது பொறுமையின்றி இந்திரியத்தை வெளியாக்கி இன்பங்காண முனைவோர் ஒரு மனைவி அல்லது பல மனைவிகளுடன் கூட பொருளாதார ரீதியில் வாழமுடியாத அதே வேளை ஹராமான செயலிலும் ஈடுபட விரும்பாதவர்களுக்கும் இத்திருமணம் ஓர் தீர்வாக அமையும்.

எது எவ்வாறு இருந்த போதிலும் இத்திருமணம் அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னாவின் பிரகாரம் பெறப்பட்ட விடயமாகும். ஸஹாபாக்கள் சிலகாலம் இதனைச் செய்துள்ளனர். அல்லாஹ் பாதுகாக்க வேண்டும். இதனை நாம் ஓர் விபச்சாரம் எனக் கூறினால் அதன் பொருள் அல்-குர்ஆனும், நபிகளாரும், ஸஹாபாக்களும் விபச்சாரத்தை ஹலாலாக்கி சிலகாலம் இதன் மூலம் பாவமிழைக்கத் தூண்டினர் என்றே கூறவேண்டும். (அல்லாஹ் பாதுகாப்பானாக.)

இது இஸ்லாத்தில் அங்கீகரிக்கப்பட்டு பின்னர் தடை செய் யப்பட்டு விட்டது எனக் கூறும் உறுதியும், தெளிவுமிக்க இறை வசனமோ, சுன்னாவையோ காணமுடியாது. இதுபற்றி ஹதீஸ் கிரந்தங்களிலும், மத்ஹப்களின் பிக்ஹ் நூல்களிலும் தேடிப்பார்க்கலாம்.

அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னாவின் ஆதாரபூர்வமான அனுமதி இத்திருமணத்திற்கு இருந்த போதிலும் ஷீஆ இமாமிய்யாக்கள் சீரான சமூக இருப்பின அத்திவாரமாய் அமைந்து குடும்ப வாழ்வுக்கு வழிவகுக்கும் நிரந்தரத் திருமணத்தையே மேலானது எனக் கூறு கின்றனர். இஸ்லாத்தில் “முத்ஆ” எனக் கூறும் ஹலாலான தற்காலிகத் திருமணத்தை நாடுவதில்லை. இவ்வாறு செய்பவர்கள் மிக அரிது.

அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னாவின் போதனைகள் அஹ்லுல் பைத்தினரின் அறிவுரை கருத்துக்கமைவாக ஷீஆ இமாமிய் யாக்கள் பெண்களுக்கான சிறப்பையும், பூரணமரியாதையும் வழங்குகின்றனர். பெண்களுக்கான உயரிய அந்தஸ்து, பெண் உரிமைகள், பண்பாடு, சொத்துரிமை, திருமணபந்தம், விவாகரத்து, பாலூட்டல், வணக்க வழிபாடு, கொடுக்கல் வாங்கல்கள் போன்ற விடயங்களில் பெண்களுக்கான சலுகைகள், உரிமைகளை அஹ்லுல்பைத் இமாம்கள், அவர்களது சன்மார்க்க பிக்ஹுச் சட்டங்களுக்கேற்ப பூரணமாக வழங்குகின்றனர் என்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாகும்.

ஜ.ஃ.பரீய்யா ஷீஆக்கள் விபச்சாரம், தன்னினச்சேர்க்கை, வட்டி, கொலை, கொள்ளை, போதைவஸ்து, சூதாட்டம், தந்திரம், சதி, மோசடி, பதுக்கல், களவு, துரோகம், டான்ஸ், குழப்பம் விளைவித்தல், கோள், மு.ஃ.மினை நோவினை செய்தல், புறம் பேசுதல், திட்டுதல், பழித்தல், பொய், வீண்பழி போன்ற பெரிய, சிறிய பாவங்களை விளக்கப்பட்ட ஹராமான செயல்களாகக் கொள்கின்றனர்.

முடியுமான வரை இவ்வாறான இழிசெயல்களை விட்டும் தவிர்ந்து நடக்க முழுமூச்சுடன் செயற்படுகின்றனர். இவ்வாறான விடயங்களை நூல்கள், பயிற்சிகள், போதனை வகுப்புகள், உரைகள், குத்பா பேருரைகள் போன்ற வழிமுறைகளைக் கையாண்டு சமுதாயத்தை விட்டும் இவ்வாறான பஞ்சமா பாதகங்களிலிருந்து மக்களைத் தடுத்து விடுகின்றனர்.

மானசீக ஒழுக்க விடயங்களில் மிகவும் கவனம் செலுத்துகின்றனர். பயன்மிக்க உரைகளை அவதானமாகக் கேட்டு அவற்றை தம் வாழ்வில் கடைப்பிடிப்பதில் முன்நிற்கின்றனர். இவ்வாறான சபைகளையும், அமர்வுகளையும் பள்ளிவாயல்கள், வீடுகள், திறந்த வெளிகளில் ஏற்பாடு செய்து நடத்துகின்றனர். விஷேட தினங்களில் விஷேட உரைகளை மக்கள் உன்னிப்பாகச் செவிசாய்ப்பதற்காக பக்திப் பிரவாகத்துடன் இவ்வாறான சபைகளுக்குப் பிரசன்னமாகுவார்கள். நபி (ஸல்) அவர்களிடமும், அவர்களின் தூய குடும்பத்தினரிடமும் கிடைக்கப் பெற்ற கருத்தாழமிக்க பிரார்த்தனைப் பேழைகளான துஆ குமைல், துஆ அபீஹம்ஸா, துஆ உஸ்ஸமாத், ஆயிரம் இறைநாமங்களைக் கொண்ட துஆஜோஸன் அல்-கபீர் (விஷேடமாக நோன்பு மாதத்தில் ஓதப்படும்) துஆ மகாரிமுல் அக்லாக் புனித நோன்பு ஸஹர் நேரத்தில் விஷேடமாக ஓதப்படும் துஆஉல் இப்திதாஹ் போன்ற முனாஜாத்துகளை ஆத்மார்த்த ரீதியாக, பக்திப்பரவசத்துடன் கண்கலங்கி, கல்புருகி பிரார்த்திப்பார்கள். இது உளரீதியான மனோவலிமைக்கு வழிவகுத்து இறைநெருக்கத்தை வரவழைக்கின்றது. “மவ்ஸூஅதுல் அதஇய்யத்துல் ஜாமியா” எனும் நாமத்துடன் இவர்களிடம் மிகவும் பிரபல்யமிக்கதாக இப்பிரார்த்தனைகளும், முனாஜாத்துகளும் காணப்படுகின்றன.

இவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களதும், அவர்களது தூய குடும்பத்தினர் பரிசுத்த சந்ததியினர்களின் அடக்கஸ்தளங்களுக்கு விஷேட மரியாதை செலுத்துகின்றனர். இவ்வகையில் மதீனா முனவ்வராவின் ஜன்னதுல் பகீ.்.யில் துயிலுற்றிருக்கும் இமாம் ஹசன், இமாம் ஷெய்னுல் ஆப்தீன், இமாம் முஹம்மது பாகிர், இமாம் ஜ.்.பர் ஸாதிக் இதே போன்று ஈராக்கின் நஜப் அஸ்ரபில் சமாதியாகி துயிலுற்றுள்ள இமாம் அலீ(அலை) கர்பலாவிலுள்ள இமாம் ஹுஸைன் (அலை) மற்றும் இவர்களோடு முஹர்ரம் ஆஷுரா தினத்தில் வீரமரணமெய்திய அவர்களது சகோதரர்கள், பிள்ளைகள், சிற்றப்பாக்களின் பிள்ளைகள், நண்பர்கள், சாமர்ரா நகரில் சமாதியுற்றுள்ள இமாம் அல்-ஹாதீ அஸ்கரீ (அலை), இமாம்களான அல்-ஜவாத், அல்-காழிம் (அலை) ஆகியோரின் ஈராக்கிலுள்ள பிரதான நகரிலுள்ள அடக்கஸ்தலங்களை மதித்து கண்ணியப்படுத்தி ஸியாரத் செய்து வருகின்றனர். இவ்வாறே ஈரான் இஸ்லாமியக் குடியரசின் மஸ்ஹத் நகரில் சமாதியுற்றுள்ள இமாம் ரிழா (அலை) கும், மற்றும் ஸீராஸ் நகரத்தில் இவர்களது பிள்ளைகளதும், பெண்களதும் அடக்கஸ்தலங்கள், சிறியாவின் தலை நகர் டமஸ்கஸ் நகரில் கர்பலா கண்ணீர் காவிய வீரமங்கை பீபிசெய்னப், காஹிராவில் கரீமது அஹ்லுல் பைத் செய்தா நபீஸா அம்மையார் ஆகியோரின் துயிலகங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான மரியாதை மாநபி (ஸல்) அவர்களுக்குச் செய்யும் மரியாதையாகும். ஏனெனில் ஒருவரது பிள்ளைக்கோ, அவரது சந்ததிக்கோ செய்கின்ற சங்கை அவருக்குச் செலுத்துகின்ற சங்கையாகும்.

”அவ்வமிசத்தில் சிலர் சிலருக்குச் சந்ததியினரே” 03:34 இவ்வாறு இறைவன் இம்ரானின் சந்ததியினர் யாஸீன், இப்றாஹீம், ஆலய.்.கூப் என பலரையும்

புகழ்ந்து கூறுகின்றான். இதில் சிலர் நபிமார்கள் அல்ல என்பதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

ஏனெனில் அல்-குர்ஆன் இப்றாஹீம் (அலை) அவர்களது மகாமுக்கு ஏற்பட்ட தூய்மையும், கண்ணியமும் போன்று, அஸ்ஹாபுல் கஹ்ப் மீதான விடயத்தை (சமாதியை) மஸ்ஜிதாகக் கட்டி அதனருகே அல்லாஹ்வை வணங்கவும், அங்கு சன்மார்க்க விடயத்தை நிலைநாட்ட எடுத்த விடயத்திற்கு மறுப்புத் தெரிவிக்க வில்லை. அவர்களது செயலை ஷிர்க்காக வர்ணிக்கவில்லை.

"நிச்சயமாக அவர்கள் மீது ஒரு மஸ்ஜிதை அமைப்போம்" (அல்கஹ்பு:02)

"இப்றாஹீம் நின்ற இடத்தை - மகாமுஇப்றாஹீம் - தொழும் இடமாக நீங்கள் ஆக்கிக் கொள்ளுங்கள்." 02:125

இறைவிசுவாசி றுகூஃ, சுஜூது செய்வது இறைவனுக்கு மட்டுமே. இவ்வாறான நல்லடியார்கள் அடக்கப்பட்டுள்ளதனால் அவ்விடங்கள் சிறப்புப் பெறுகின்றன. பரிசுத்த பண்புகள் இதனாலேயே அங்கு நிறைவேற்றப்படுகின்றன.

எவர் மகாமுக்குப் பின்னால் நின்று தொழுகின்றாரோ அவர் மகாமை வணங்கினார் என்பதல்ல. அவ்வாறே எவர் மதக் கிரிகைக்காக ஸபா, மர்வாக்கிடையே தொங்குதோட்டம் ஓடினால் மலைகளை வணங்கினார்கள் என்பதல்ல பொருள். மாறாக இறைவனை தமது குறிக்கோளாகக் கொண்டதனால் இறைவன் சிலரைத் தமது நேசர்களாகத் தேர்ந்து எடுத்துக் கொண்டான். இவ்வாறே இறைஇலட்சியத்தோடு சம்பந்தப்பட்டதனால் அரபா நாளுக்கு மினா, அறபா பூமி என இவற்றிற்கு சிறப்பும், மகிமையும் காணப்படுகின்றது.

இதனாலேயே ஏனைய முஸ்லிம்களைப் போன்று ஜஃபரீயா ஷீஆக்கள் பெருமானாரையும், அவர்களது சந்ததிகளையும் கண்ணியப்படுத்தி அவர்களது சமாதிகளைத் தரிசித்து வருகின்றனர். இதனால் பல படிப்பினைகளும், அவர்களுடனான உடன்படிக்கையைப் புதுப்பித்து எவ்வாறான குறிக்கோளை நிலைநாட்டப் போராடினார்களோ அவற்றை ஞாபகப்படுத்தி பேணிப் பாதுகாக்கவும், அவர்களது சிறப்புகளை ஞாபகிக்கவும், அவர்கள் புரிந்த போராட்டம், வணக்க வழிபாடு என்பனவற்றை எல்லாம் புடம் போட்டு இதனால் தமது வாழ்வில் ஏற்பட்ட துயரங்களை ஞாபகமூட்ட இவ்வாறான தரிசிப்பு உந்துசக்தியாய் அமைகின்றது.

வரலாற்று ஏடுகள், ஸீராக்களைப் புரட்டும் போது உஹத் யுத்தத்தில் வீர மரணமெய்திய ஹஸ்ரத் ஹம்ஸா (ரழி) அவர்களுக்கு ஹம்ஸாவுக்காக அழுபவர்கள் இல்லையே எனக் கூறியதை நாம் காணவில்லையா? தன் சிறப்புக்குரிய மகன் ஹஸ்ரத் இப்றாஹீமின் மரணத்திற்காக தாம் அழவில்லையா? சமாதிகளைத் தரிசிக்கும் வகையில் "ஜன்னதுல் பகீஃ"க்குச் சென்று அவர்கள் ஸியாரத் செய்யவில்லையா? "கபுறு" (அடக்கஸ்தலங்)களைத் தரிசனம் செய்யுங்கள், நிச்சயமாக அது மறுமையைப் பற்றிய ஞாபகத்தைத் தோற்றுவிக்கும் எனக் கூறவில்லையா?

இறைதூதரின் திருக்குடும்பத்தினரைப் பற்றி ஞாபகிப்பது அவர்கள் மேற்கொண்ட பணிகளும், அவர்கள் இஸ்லாத்தின் பாதையில் செய்த தியாகங்கள் முஸ்லிம் உம்மத்திற்காகச் செய்த அர்ப்பணிப்புகள் பற்றி எல்லாம்

பார்ப்பதெல்லாம் உயிரோட்டத்தில் வீரியம், தியாகச் சிந்தனை என்பனவற்றைத் தோற்றுவிக்கவில்லையா?

இது மானுட கலாச்சார அறிவு பூர்வமான விடயமாகும். ஒரு சமூகம் தமது முன்னோர்களின் விழுமியங்களையும், அவர்கள் உருவாக்கிய கலாச்சாரங்களையும் அதன் அடிச்சுவடுகளின் அடிப்படையில் உயிர்ப்பிக்கும் போது அது அவர்களைக் கண்ணியப்படுத்தி, அவர்களின் சிறப்புக்களைக் கண்ணியப்படுத்தியதாக அமையும். இவர்களைப் பற்றி அறியவும், அவர்களது வழிமுறைகளையும், விழுமியங்களைப் படிக்கவும் வழியேற்படும். இதனையே இறைமறை நபிமார்கள், வலிமார்கள், நல்லோர்களின் வாழ்வில் படிப்பினை உண்டு எனக் கூறுகின்றது.

ஐ.ஃ.பரிய்யா ஷீஆக்கள் கண்மணி (ஸல்) அவர்களிடமும், அவர்களது அஹ்லுல்பைத் இமாம்களிடமும் ஷபாஅத்து வேண்டி நிற்பார்கள். இவர்களைக் கொண்டு தாம் செய்த பாவங்கள், நோய் நிவாரணிக்காக இறைவனிடம் தவஸ்ஸுல் செய்வார்கள். இது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதோடு அவ்வாறு செய்யுமாறு அது வேண்டுகின்றது.

> ”இன்னும் நிச்சயமாக அவர்கள் தமக்குத் தாமே அநீதி யிழைத்துக் கொண்டு உம்மிடம் வந்து பின்னர் அல்லாஹ் விடம் அவர்கள் பாவமன்னிப்புக் கோரி அவர்களுக்காக தூதரும் பாவமன்னிப்புக் கோரி இருந்தால் தௌபாவை ஏற்று மன்னிப்பவனாக, மிகக் கிருபையுடையோனாக அல்லாஹ்வை அவர்கள் கண்டிருப்பார்கள். 04:64

இது போன்று ஷபாஅத் அந்தஸ்தைப் பற்றி:-

> ”இன்றும் உமதிரட்சகன் அடுத்துப் பல உயர் பதவிகளை உமக்கு அளிப்பான். அப்போது நீர் திருப்தியடைவீர்.” 93:05

பாவம் செய்தவர்களுக்குப் பரிந்துரை செய்யும் அந்தஸ்தை அல்லாஹ் தனது கண்ணிய மிக்க நபிக்கு வழங்கி தேவைப்படுவோருக்காக வஸீலாவையும் வழங்கிவிட்டு பின்னர் அதனைத் தடுப்பதென்பது அறிவுபூர்வமான விடயமாகுமா? அவரிடம் யாராகிலும் ஷபாஅத் வேண்டி அல்லது இவ்வாறான விடயத்தை நபியிடமிருந்து பெறுவதை ஹராம் எனக் கூறுவது என்ன நியாயம்?

ய.ஃ.கூப் நபியின் பிள்ளைகள் தமது தந்தையிடம் ஷபாஅத் வேண்டிதைப் பற்றி இறைவன் குறிப்பிடுவதைக் காணவில்லையா?

> “எங்கள் தந்தையே எங்கள் பாவங்களை மன்னிக்குமாறு நீங்கள் எங்களுக்காக மன்னிப்புத் தேடுவீராக! நிச்சயமா கவே நாங்கள் குற்றவாளிகளாகவே இருக்கின்றோம் என்று அவர்கள் கூறினார்கள்.” (12:97)

பரிசுத்த நபியாகிய ஹஸ்ரத் ய.ஃ.கூப், அவர்களது கோரிக்கைக்கு மறுப்புரைக்கவில்லை.

”நான் உங்களுக்காக மன்னிப்பை கோருவேன்.” (12:98)
எனக் கூறினார்கள்.

றசூல் (ஸல்) அவர்களோ இமாம்களோ (இறையருள் உண்டாகட்டும்) மரணித்து விட்டார்கள். எனவே அவர்களிடம் பிரார்த்தித்து வேண்டி நிற்பது பயனளிக்காது என எவரும் வாதிட முடியாது. ஏனெனில் நபிமார்கள் விஷேடமாக நாயகம் (ஸல்) அவர்கள் இறைவன் கூறுவது போன்று உயிர் வாழுகின்றார்கள்.

> ”மேலும் அவ்வாறே நீங்கள் மனிதர்களுக்கு சாட்சியாளர் களாக ஆகுவதற்கும், (நம் தூதர்) ரசூல் உங்களுக்கு சாட்சியாளராக இருப்பதற்காகவும், நடுநிலையான சமுதா யத்தினராக நாம் உங்களை ஆக்கினோம்.” (02:143)
>
> அதாவது ஸாஹித் (சாட்சி)யாக இருப்பார்கள். இதே போன்று “மேலும் (நபியே) நீர் கூறுவீராக! நீங்கள் செய்ப வற்றைச் செய்யுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வும், அவனு டைய தூதரும், விசுவாசிகளும் உங்கள் செயலைப் பார்ப் பார்கள்.” (09:105)

இவ்விறைவசனங்கள் வானம், பூமி, சூரியன், சந்திரன் சுழல்வது போன்று மறுமை நாள் வரை மாசின்றிக் காணப்படும்.

இன்றும் இறைதூதர் (ஸல்) அவர்களும், அவர்களது அஹ்லுல்பைத் இமாம்களும் தீரச்செயல் புரிந்து வீர மரணமெய்திய ஷுஹதாக்களாவர். அல்-குர்ஆன் ஷுஹதாக்கள் உயிருடன் வாழ்பவர்கள் எனப் பல இடங்களில் கூறுவதற்கிணங்க இவர்கள் உயிர் வாழும் உத்தமர்கள்.

ஷீஆ ஜஃபரியாக்கள் பெருமானார் (ஸல்) அவர்களதும், அவர்களது அஹ்லுல் பைத் இமாம்களதும் பிறந்த மறைந்த நாட்களை விழாவாரியாக வைபவங்களை ஏற்பாடு செய்து வருகின்றனர். இந்நிகழ்வுகளின் போது அவர்களது தியாகங்கள், சிறப்புகள், சீரிய வழிகாட்டல்கள் என்பனவற்றை எல்லாம் இதில் ஞாபகிப்பார்கள். இதுபற்றி இறைமறையில் நபிமார்கள் குறிப்பாக பெருமானார் (ஸல்) அவர்கள் பற்றிய விடயங்களை எல்லாம் ஆழமாக ஆய்வு செய்து இவர்களது வழிகாட்டல்களின் பக்கம் மக்களை வழிநடாத்தி நல்வாழ்வுக்கு வழிசெய்கின்றனர்.

இவ்வாறான நிகழ்வுகளில் ஜஃபரிய்யா ஷீஆக்கள் ஆண், பெண் கலப்பு, போதைவஸ்துப் பாவனை என்பவற்றைத் தவிர்த்து, படைத்தவனின் அந்தஸ்திற்கு பங்கமேற்படாத வகையிலும், வகுக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்ட எல்லைக்குள் நின்று அல்லது அல்-குர்ஆன், அஸ்ஸுன்னா அடிப்படையில் ஊகித்துப் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் இவ்வாறான நிகழ்வுகளில் ஹராமான விடயங்கள் கலந்து விடாது பேணிக்கொள்வார்கள்.

றசூல்(ஸல்) அவர்களதும், அவர்களது பரிசுத்த இமாம்களதும் ஹதீதுகளை உள்ளடக்கிய உதாரணமாக ஸிகதுல் இஸ்லாம் குலைனி அவர்கள் “அல்-காபி” ஷெய்க் ஸதூக் அவர்களது “மன்லா யஹ்ழுருஹுல் பகீஹ்”, ஷேய்க் தூஸி அவர்களின் ”அல்-இஸ்திப்ஸார்”, “அத்-தஹ்தீப்” போன்ற நூட்களிலிருந்து ஹதீஸ்களைப் பெறுகின்றனர்.

இவ்வாறான ஹதீஸ் நூல்களிலுள்ள விடயங்கள் சரியானதாக (ஸஹீஹ்) இருந்தாலும் இக்கிரந்தங்களையோ, அதனைக் கோர்வை செய்தவர்களையோ ஸஹீஹ் எனக் கூறுவதில்லை. இதனால் ஜஃபரி ஷீஆக்களின் சட்டக்கலை

வல்லுனர்களிலுள்ள எல்லா ஹதீதுகளையும், ஸஹீஹானது எனக் கூறுவதில்லை. மாறாக அவை சரியானது என உறுதிசெய்யப் பட்டால் சரியான அல்லது ஹலாலானதை எடுத்துக் கொண்டு உறுதி செய்யப்படாதவற்றை விட்டு விடுவார்கள். அல்லது ஹதீதுக்கலை வரையறைக்குள் (இல்முந்திராயா, வர்ரிஜால், வகவாயிது இல்முல் ஹதீஸ்) கொண்டு சென்று அதன் முறையின்படி செயற்படுகின்றனர்.

கொள்கை (அகீதா), சட்டக்கலை (பிக்ஹ்), பிரார்த்தனை (துஆ), நற்பண்பு (அக்லாக்) போன்ற விடயங்கள் மேற்கூறிய நூல்களுக்கு மேலதிகமாக பரிசுத்த இமாம்களிடமும் இமாம் அலீ (அலை) அவர்களின் பேருரை, கடிதங்கள் சுருக்க மிக்க தெளிவுரை என்பனவற்றை உள்ளடக்கிய (குதப், றசாயில், ஹிகமுல்கிஸார்) செய்யத் ரழி அவர்கள் கொடுத்த நஹ்ஜுல் பலா.:.ஆ போன்ற பல நூல்களிலிருந்தும் விடயங்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

இதே போல் இமாம் செய்னுல் ஆப்தீன் (அலை) அவர்களின் "ரிஸாலதுல் ஹுகூக்", ஸஹீபா அஸ்-ஸஜ்ஜாதிய்யா, இமாம் அலீ (அலை) அவர்களின் அஸ்-ஸஹீபதுல் அலவிய்யா, உயூன் அ.:.பாருர் ரிழா, அத்-தௌஹீத், அல்-கிஸாப், இலலுஸ் ஸராயி.:., மஆனியுல் அக்பார் போன்ற ஷேய்க் சதூக் (ரஹ்) அவர்களின் கிரந்தங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

றசூல் (ஸல்) அவர்களிடமிருந்து வெளியாகிய ஸஹீஹான ஹதீஸ்களை முன்னரும், தற்போதும் ஷீஆ ஜ.:.பரி அறிஞர்கள் சகோதர சுன்னத் ஜமாஅத்தின் நூல்களிலிருந்து பெறுவதையும் காணலாம். இதில் எவ்வித குரோதங்கள், விருப்பு-வெறுப்புகளுக்கு அப்பால் நின்று நாயகம் (ஸல்) அவர்களுடனிருந்தவர்கள், அவர்களது மனைவிமார், அபூஹுரைரா, அனஸ் இப்னு மாலிக் போன்ற பிரபல்யமிக்க பெரும் ஸஹாபாக்களிடமிருந்து அல்குர்ஆனுக்கும், இஜ்ம.:., சிந்தனை என்பனவற்றிற்கு முரண்படாதவைகளை ஆதாரமாகக் கொள்வதைக் காணலாம்.

முன்னரும், தற்போதும் முஸ்லிம் சமுதாயம் எதிர்கொள்ளும் சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் பின்வரும் இரு விடயங்களே காரணமாகும் என ஷீஆ ஜ.:.பரியாக்கள் கருதுகின்றனர்.

1. தலைமைத்துவத்திற்குப் பொருத்தமான அஹ்லுல் பைத்களை விட்டும் திசைமாறிச் சென்றதும் வழிகாட்டல்கள், கற்கை நெறிகள் குறிப்பாக திருமறை அல்குர்ஆனுக்கு அவர்கள் வழங்கிய விரிவுரைகள் என்பனவற்றை புறக்கணித்தது.

2. மத்ஹபுகளுக்கும், இஸ்லாமிய அமைப்புகளுக்குமிடையே யான கருத்து வேறுபாடுகள், பிரிவினைகள், வேற்றுமைகள் என்பனவுமாகும்.

இதனைக் கருத்திற் கொண்டு ஷீஆ ஜ.:.பரியாக்கள் எப்போதும் இஸ்லாமிய உம்மத்தின் ஓரணிக்காக அன்பும், பாசமுமிக்க சகோதரத்துவ கையை நீட்டியுள்ளனர். மத்ஹபுகளை உருவாகிய முஜ்தஹீதுகளின் சட்டங்கள், தீர்ப்புகளுக்கு மானசீக மரியாதையை வழங்கி வருகின்றனர்.

பிரபல்யமிக்க எகிப்திய புத்திஜீவிகள் பாராட்டியுள்ள ஷேய்க் தூஸியின் பிக்ஹுக்கலை "அல்கிலாப்" தப்ஸீர் கலைஞர் தப்ரீஸியின் மஜ்மஉல் பயான் போன்ற நூற்களில் இஸ்லாத்தின் ஆரம்பகால ஷீஆ அல்லாத அறிஞர்களின்

கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் தமது நூற்களில் குறிப்பிட்டுள்ளதைப் பாராட்டி இருப்பதைப் பார்க்க முடிகின்றது.

இவ்வாறே அகீதா ரீதியாக எழுதப்பட்டுள்ள நஸ்ருதீன் அத்-தூஸியின் தஜ்ரீதுல் இ.ஃதிகாத். இதற்கு அலாஉத்தீன் அல்-கௌஸஜி அல்-அஷ்அரீ அவர்கள் விரிவுரை செய்துள்ளார்கள்.

பிக்ஹுக்கலை, அகீதா, வரலாறு, முஸ்லீம்களின் சமகால விடயங்களை விரோதம், கோபதாபங்கள் என்பனவற்றிற்கு அப்பால் நின்று முன்னணி இஸ்லாமிய அறிஞர்கள் உட்கார்ந்து ஆராய வேண்டும் என ஷீஆ ஜ.ஃபரியாக்கள் உலமாக்கள் கருதுகின்றனர். இது பிரிவினை மிக்க முஸ்லிம் சமூகங்களிடையே புரிந்துணர்வுக்கும், நெருக்கத்திற்கும் வழிகோலும். இது இஸ்லாத்திற்கும், முஸ்லீம்களுக்கும் எதிராகச் செயற்படுவோர்க்கு பாரிய அடியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

புனித கிப்லாவை முன்னோக்கும் எந்த முஸ்லிமையும் அவர் எந்த மத்ஹபைச் சேர்ந்தவராக இருந்த போதிலும் இஜ்ம.ஃ இருந்தால் ஒழிய, ஷீஆ ஜ.ஃபரியாக்கள் அவர்களை ஒரு போதும் காபிர் எனக் கூறுவதில்லை. அவர்களுடன் பகைமை பாராட்டவோ, சதித்திட்டம் தீட்டவோ அனுமதிக்கப்படுவதில்லை.

இஸ்லாம் பற்றிய மார்க்க தீர்ப்புகளை ஷீஆ ஜ.ஃபரியாக்கள் கண்ணியப்படுத்தி தமது மத்ஹபிலிருந்து ஷீஆ ஜ.ஃபரியா மத் ஹபில் மாறி இருந்து கொண்டு அதன்படி தமது நற்கிரிகைகளைச் செய்தாரோ அது சரியானதும் மீண்டும் அவற்றை நிறைவேற்றத் தேவையில்லை எனவும் சரிகாணுகின்றனர். தொழுகை, நோன்பு, ஹஜ், நிகாஹ், தலாக், கொடுக்கல் வாங்கல் போன்ற முன்னர் நிறைவேற்றிய இவ்வாறான பர்ழுகள், சரியானவை எனவும், தாம் பின்பற்றிய முன்னைய மத்ஹபின் சட்டங்களுக்கேற்ப நடைபெற்ற திருமண ஒப்பந்தம் அல்லது விவாகரத்து விடயம் என்பன சரியானவை எனவும் மத்ஹபு மாறிய பின் மீண்டும் நிகாஹ் அல்லது தலாக் கூறவேண்டிய அவசியமில்லை எனவும் கருதுகின்றனர். இவ்வாறான ஜ.ஃபரி மத்ஹபுக்கு மாறிய பின் ஏனைய சகோதரர்கள் மற்றும் உறவினர்கள் போன்று எவ்விதப் பாகுபாடுமின்றி அவர் நடாத்தப்படுவார்.

காதியானிய்யா, பஹாயிய்யா, பாதியானிய்யா போன்ற ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட மத்ஹபுகளுடன் உடன்படுவதில்லை. மாறாக இவ்வாறான மத்ஹபுகளை எதிர்த்துப் போராடுவதன் மூலம் அவை வளர்ந்து விடாதவாறு தடை செய்து வருகின்றனர்.

ஷீஆக்கள் சில வேளைகளில் எப்போதுமல்லாத தகிய்யா (பாதுகாப்பு)வைப் பின்பற்றுகின்றனர். அதாவது தனது மத்ஹபையும், கொள்கையையும் மறைப்பதாகும். இது அல்குர்ஆனின் மிகத் தெளிவான ஆதாரத்தின் அடிப்படையில் நிகழ்கின்றது. இது குழப்ப நிலை தோன்றக் காரணமாய் அமைய வாய்ப்பேற்படும்போது பின்வரும் நிலைமைகளில் இவ்விடயம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

1. உதிரம் வீணாகச் சிந்தப்பட்டு தன்னுயிர் மற்றும் இரத்தம் சிந்துவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

2. சண்டை சச்சரவுகள் ஏற்படாதவாறு முஸ்லிம்களின் ஒற்றுமையைக் கருத்திற் கொள்ளும் போது கடைப்பிடிக்கப் படுகின்றது. முஸ்லிம் சமுதாயத்தின் பின்னடைவுக்குரிய காரணியாக ஷீஆ ஜஃபரியாக்கள் சிந்தனை, கலாச்சாரம், அறிவு, தொழில்நுட்பக் கலைகளில் பின்னடைவைக் கருதுகின்றனர். ஆண், பெண் இருபாலாரும் அறிவுணர்ச்சி பெற வேண்டும். பல்கலைக்கழகங்கள், அறிவாலயங்களை உருவாக்கி கல்வி, கலை, சிந்தனை போன்ற விழுமியங்களைத் தோற்றுவிக்க வேண்டும். சமகால அறிவியலைப் பயன்படுத்தி பொருளாதார, கட்டிட, உற்பத்தி என்பனவற்றை நோக்கி உம்மத்தின் உள்ளத்தில் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும். சகல விடயங்களிலும் தன்னிறைவுகாண உற்சாகமூட்டி மற்றவர்களது தோளில் ஏறி சவாரி செய்யாது விழிப்படையச் செய்யவேண்டும்.

இந்நோக்கை அடைவதற்காக ஷீஆ ஜஃபரியாக்கள் எங்கெல்லாம் காணப்படுகின்றார்களோ மற்றவர்களைப் போன்று அங்கெல்லாம் அறிவாலயங்களை ஸ்தாபித்து பல்துறை அறிஞர்களையும், விற்பன்னர்களையும் உருவாக்கி விடுகின்றனர். இதனால் வாழ்க்கைக்குத் தேவைப்படும் பல்துறை விற்பன்னர்களும், துறைசார் அறிஞர்களும் தோற்றுவதைக் காணலாம்.

ஷீஆ ஜஃபரியாக்கள் தமது உலமாக்களுடன் அலாதியான தொடர்பாடலை வைத்திருக்கின்றனர். தக்லீத் எனும் பின்பற்றுதல் அமைப்பில் மார்க்க சட்டதிட்டங் களையும், வாழ்வுடன் சம்மந்தப்பட்ட பொதுவாக அனைத்து அம்சங்களிலும் இவர்களது மார்க்கத் தீர்ப்புக்களைக் கடைப்பிடிக்கின்றனர். இவர்களது அகீதாவின் அடிப்படையில் சட்டத்துறை சார் புகஹாக்கள் அஹ்லுல்பைத் பரிசுத்த இமாம்களின் இறுதியான இமாமின் பிரதிநிதிகளாகவும், நாயிப்களாகவும் உள்ளார்கள். இந்த உலமாக்கள் தமது அன்றாட வாழ்வுக்காகவும், பொருளீட்டுவதிலும் அரசையோ, அரசாங்கத்தையோ தங்கிவாழ்வதில்லை. இதனால் விசாலமான இச்சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்களாகக் காணப்படுகின்றனர்.

சட்டக்கலை விற்பன்னர் (புகஹாக்)களை உருவாக்கும் அறிவாலயங்களை தொழுகை, நோன்பு போன்று மக்களால் புகஹாக்களிடம் செலுத்தும் ஸகாத், கும்ஸ் நிதியிலிருந்தே இவ்வாறான அறிவகங்கள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. மக்கள் இதனை ஒரு வழிபாடாகவும், ஆத்மார்த்த கடமையுடன் செலுத்தி வருகின்றனர்.

ஷீஆ இமாமிய்யாக்களிடம் உழைப்பில் கிடைக்கும் இலாபத்தில் ஐந்தில் ஒன்றை (1∴5) வழங்குவது வாஜிபாகும். இதுபற்றிய தெளிவான ஆதாரங்களை ஹதீஸ் கிரந்தங்கள், ஸிஹாஹ், சுனன்களில் காணலாம். (குறிப்பாக மப்ஹதுல் கும்ஸ் அல்-இஸ்தித்லாலி இந்த புகஹா உஷ்-ஷீஆ)

அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னா அடிப்படையிலான இஸ்லாமியக் குடியரசுகளை அமைத்து முஸ்லிம்களின் உரிமைகள் மற்றும் ஏனைய நாடுகளுடனான நீதியும், சமாதானமுமிக்க தொடர்புகளை ஏற்படுத்தி தமது மார்க்க சட்டதிட்டங்கள், இஸ்லாமிய கலாச்சார, பொருளாதாரம், அரசியல் போன்ற சுதந்திரத்திற்காக உழைப்பது முஸ்லிம்களின் உரிமையாக ஷீஆ ஜஃபரியாக்கள் கருதுகின்றனர். இதன் மூலம் இறைமறை குர்ஆன் கூறுவதைப் போன்று இஸ்லாமிய சமூகம் கண்ணியமாக வாழ வழிவகுக்கின்றது.

”கண்ணியம் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும், விசுவாசிகளுக்கும் உரிய தாகும்.” (63:08)

(விசுவாசங் கொண்டோரே) நீங்கள் தைரியத்தை இழந்து விட வேண்டாம். கவலையும் பட வேண்டாம். (உண்மை யாகவே) நீங்கள் விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால் நீங்கள்தாம் மிக்க மேலானவர்கள். 03:139

இஸ்லாம் தன்னைத் தெளிவான மார்க்கமாகவும், பூரணவாழ்க்கைத் திட்டமாகவும் தன்னகத்தே அனைத்து விதமான சட்டதிட்டங்களையும் அது கொண்டிருப்பதாகவும் பிரகடனம் செய்துள்ளது என ஷீஆ ஜ.்.பரியாக்கள் கருதுகின்றனர். பூரணத்துவமிக்க இவ்வழிமுறையைத் தெளிவாக அறிய இஸ்லாமிய உம்மத்தின் புத்திஜீவிகளான உலமாப் பெருந்தகைகள் ஒன்றுபட்டு ஆய்வுகளையும், ஆக்கப்பணிகளையும் செய்ய முன்வர வேண்டும். சமூகம் எதிர்நோக்கியுள்ள பாரிய சவால்களைத் தீர்த்து வைத்து அவர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

”நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவிசெய்தால் அவன் உங்க ளுக்கு உதவி செய்வான். மேலும் உங்களுடைய பாதங்களை நிலை பெறச் செய்வான்.” 47:07

ஜ.்.பரிய்யா என அழைக்கப்படும் ஷீஆ இமாமிய்யாக் களிடமும் கொள்கை, ஷரீயா ரீதியாகக் காணப்படும் மிக முக்கிய விடயங்களாகும். இந்த சமூகம் தமது ஏனைய முஸ்லிம் சகோதர சமூகத்துடன் இஸ்லாமிய உலகின் நாலாபக்கங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். இஸ்லாத்தின் இருப்பையும், முஸ்லிம்களின் கண்ணியத்தையும் பேணிக் காப்பதில் தமது உயிரையும், உடமைகளையும் அர்ப்பணித்து இப்பாதையில் ஈடுபட்டு வருகின்றனர்.